லை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

க்கங்கள்: இருபது — Valampurii

ங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 17 வியாழக்கிழமை (01.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## புலிகளின் பணத்தை இலங்கைக்கு எவராலும் கொண்டுவர முடியாது

### பிரதி அமைச்சர் முரளிதரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள விடுதலைபுலி ின் பணத்தை இலங்கைக்கு கொண்டு முடியாது என்று இலங்கை மீள் குடியேற்ற தி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ரிவித்துள்ளார்.

வன்னியில் நடைபெற்று வரும் மீள்குடியேற் றம் தொடர்பாக ஆராய இந்தியாவின் சிறப்பு நிபுணர்கள் குழு ஒன்று இலங்கை வரவுள்ள தாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இலங்கையில் மீள்குடி யேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளி தரன் (கருணா) கொழும்பில் செவ்வாய்க்கிழமை சிறப்பு செய்தியாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அதிகாரங்களுக்கு உட்பட்டே நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தமது அதிகாரங்களுக்கு உட் பட்ட வகையிலேயே நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் பொதுச்செய லாளர் பான் கீ மூன் தெரிவித்துள் ளார்.

இலங்கையில் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங் குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு குறித்த கருத்து வெளியிட்ட போது அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அணி (20ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு!

### தலைவராக இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனியொரு அரசியல் கட்சியாக நேற்று பதிவு செய்து காண்டது. தலைவராக சம்பந்தனும் உபதலைவராக விநாயகமூர்த்தியும் மாவை னாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ணை செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்த்தேசியக் கூட்ட ப்பை ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான ணப்பம் நேற்று மதியம் தேர்தல் ஆணையாளரிடம் அதன் புதிய இணைச் செய ர்களினால் கையளிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித் ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கையில் நடந்தது என்ன?

### ஐ.நா.குழு விசாரிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த ஆய்வுகளை ஐ.நா.நிபுணர் குழு இந்த வாரம் தொடங்கும் என்று ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சா ளர்களில் ஒருவரான ஃபர்ஹான் ஹக் தெரி வித்துள்ளார்.

அவர் டுபாயிலிருந்து வெளியாகும் த நஷ னல் ஆங்கில தினசரிப் பத்திரிகைக்கு வழங் கிய பேட்டியிலேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர்கள் மட்டும் தமிழரசுக் கட்சியின் தலைவிதியை நிர்ணயிக்க முடியாது!

### பேராசிரியர் சிற்றம்பலம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பினை அரசியல் கட்சியாகப் செய்ய வேண்டிய ஒழுங்குகள் யாவும் ரசுக் கட்சியின் தலைவரான திரு. இரா. ந்தன் தலைமையில் பூர்த்தியாகிவிட்

இதனை இட்டு இக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் 1956ஆம் ஆண்டு தொடக் கம் இக்கட்சியின் இலட்சியத்திலிருந்து இம்மி யும் விலகாது பேசியும் எழுதியும் செயற்பட் டும் வருபவனாகிய நாம் அதிர்ச்சியடைந் தோம்.

இத்தகைய அதிர்ச்சியில் தான் வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள கட்சித் தொண்டர் களும் உறைந்திருந்ததை அவர்கள் நம் முடன் மேற்கொண்ட தொடர்புகள் மூலம் அறிந்து கொண்டேன் என யாழ். பல்கலைக் கழகத்தின் ஓய்வு நிலைத் சிரேஷ்ட பேராசிரி யரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன் னாள் தலைவர்களில் ஒருவரான சி.க.சிற்றம் பலம் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை யாழில் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் எரிபொருட்களின் விலை கள் இன்று முதல் குறைக்கப்பட்டுள்ள தாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் யாழ்.பிராந்தியமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகள் ஒரு ரூபாயாலும் மண்ணெண்ணெய் 50 சதத்தாலும் குறையும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோல் 118 ரூபாயாகவும் டீசல் 75 ரூபா 50 சதமாகவும் மண்ணெண்ணெய் ரூபாய் 53.50ஆக விற் பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ச-6)

## தென்னிந்திய திரையுலகம் என்ன செய்ய முடியும்?

### நடிகர் சல்மான்கான் கேள்வி

(கொழும்பு)

ரெடி திரைப் படத்துக்கான படப்பிடிப்பு இலங்கையில் இடம்பெறுவதற்கு எதிராக தென்னிந்திய திரைப்படத்துறையினர் எடுக் கும் போராட்ட நடவடிக்கைகள் குறித்து நான் வலைப்படப் போவதில்லை என உலகப் கழ்பெற்ற வட இந்திய சினிமா நட்சத்திரம் சல் மான்கான் தெரிவித்துள்ளார்.

சல்மான்கான் மற்றும் தென்னிந்திய நடிகை அசின் ஆகியோர் அடங்கிய குழு, ரெடி திரைப்படத்துக்கான படப்பிடிப்பை இலங் கையில் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் மாநாடு ஒன்று நேற்று கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம் பெற்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்படைத் தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



### காங்கேசன்துறை அபிவிருத்தி குறித்து ஆராய்வு




(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு வருகை தந்த இந்திய கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிர்மல் வர்மா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

நேற்றுக்காலை விசேட விமானம் மூலம் பலா லியை வந்தடைந்த அவர் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்குச் (20ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற, ஓய்வு பெற்றுச் செல்லும் அரச அதிபர் க. கணேஷுக்கான பிரியாவிடை வைபவத்தில் கணேஷ் தம்பதியினர் நலன்புரிக் கழகத்தினரால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் மற்றும் தங்க மோதிரம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் அரச அதிபர் க.கணேஷ், திட்டப் பணிப்பாளரும் நலன்புரிக் கழகத் தலைவருமான பிரதீபன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர்கள் வாழ முடியாது அவர்களுக்கு புகலிடம் வழங்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

ஈழத் தமிழ் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜூலியா கில்லார்ட்டுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு, இலங்கை வாழ்க்கையை நடத்துவதற்குப் பேராபத்தான இடமாக இருக்கின்றது. ஆயுதக் குழுக்களுக்கு எதிரானவர்கள், அரசை விமர்சிப்பவர்கள், அரசியல்வாதிகளை எதிர்ப்பவர்கள், அரசுக்கு எதிரானவர்கள் என்றெல்லாம் முத்திரை குத்தப்பட்டிருப்பவர்களுக்கு இலங்கையில் எந்தவொரு இடமுமே பாதுகாப்பாக இல்லை.

சுமார் 10 ஆயிரம் பொதுமக்கள் வரை வழக்கு நடவடிக்கைகள் எவையுமின்றி தொடர்ச்சியாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அந் நாட்டு அரசினால் புலிகள் என்று சந்தேகிக்கப் படுபவர்கள் ஆவர். படுகொலைகள், சித்திரவதைகள், காணாமல் போதல்கள் என்பன இப்போது கூட தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

இச் சூழ்நிலைகளிலேயே ஈழத் தமிழ் அகதிகள் வெளிநாடுகளுக்குப் புகலிடம் கோரி வருகின்றார்கள். எனவே அவுஸ்திரேலியாவுக்குப் புகலிடம் கோரி வருகின்ற ஈழத் தமிழ் அகதிகளுக்கு அவுஸ்திரேலியா அரசியல் தஞ்சம் வழங்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் ஈழத் தமிழ் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் முன்னெடுப்புக்கள் சுமார் 3 மாத காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் 8 ஆம் திகதியுடன் இந்த இடைநிறுத்தம் முடிபடைகின்றது. அதற்குப் பின்னரேனும் ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்க புதிய பிரதமரான நீங்களும் உங்கள் அரசும் நடவடிக்கை எடுங்கள் என்றுள்ளது. (ச-5)

## அரச அதிபர் கணேஷுக்கு ஆதீன முதல்வர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தை நன்கு அபிவிருத்தி செய்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இக் கட்டான வேளையிலும் இன்னுயிர் காத்த அரச அதிபர் க.கணேஷின் பணி பாராட்டுக்குரியது என நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

முன்னாள் அரச அதிபர் க. கணேஷின் ஓய்வுக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் வெளியிட் ஆசிச் செய்தியிலேயே இதனை, தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்.மாவட்ட அரச அதிபராக அயராது உழைத்து 01.01.2005 முதல் நேற்றுவரை அளப்பரிய் சேவையாற்றியஎமது அன்புக்குரிய க.கணேஷ் அவர்கள் தமது கடமையில் நின்றும் ஓய்வு பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தை நன்கு அபிவிருத்தி செய்து அந்தந்த நேரத்தில் அர்ப்பணிப்புணர்வுடனே செயற்பட்டு முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்று இக்கட்டான வேளையிலும் இன்னுயிர் காத்த அவரது பணி பாராட்டுக்குரியதாகும்.

அவர் இன்னும் நீண்ட நாள் வாழ்ந்து எமது யாழ்.மக்களுக்கு அரிய பணியாற்ற வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து இறையாசி கிட்ட வாழ்த்தி வணங்குகின்றோம்.(ச)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் பனிக்கர் வீதியில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட விளையாட்டு மைதானத்திற்கு அருகில் 2 1/2 பரப்பளவு காணியும் கட்டிய குறையில் உள்ளமேல்வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு T.P No: 0213214777 (C-579)

## வேலை ஆட்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல காஸ் விற்பனை நிலையத்திற்கு காஸ் சிலிண்டர்கள் விநியோகிப்பதற்கான வேலை ஆட்கள் தேவை. தங்குமிடவசதி, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0772306496 (C-577)

## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT

FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)

FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை : G.C.E. (O/L) போதுமானது மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

### Access Programming

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

### IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

We guarantee minimum band 5.0 Upwards

### Spoken English with Grammar

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

IELTS, Spoken English ஆகிய பாடநெறிகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட தொழில்சார் நல்ல அனுபவமுள்ள ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது.

100 % பயிற்சி

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திறகமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)

(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)

Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 03.07.2010 04.07.2010 10.07.2010

காலை : 10.00 மணி மாலை : 04.00 மணி

அறிமுக வகுப்பில் மாணவர்கள் வசதிக்கேற்ற நேர அட்டவணை மேற்கொள்ளப்படும்.

# இன்று ஒரு தகவல்

## முயற்சி திருவினையாக்கும்

ஒரு ஆள் இருந்தான். அவனுக்கு வேதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசை.

யாரிடம் கற்றுக் கொள்வது? என்று யோசித்துப் பார்த்தான். அது என்ன சாதாரண விடயமா?

உடனே ஒரு வேதவிற்பன்னரைத் தேடிப் போய்க் கண்டுபிடித்தான்.

"சுவாமி! எனக்கு வேதம் கற்றுக் கொடுங்கள்" என்றான்.

அவர் பார்த்தார். வேதத்தில் மிகவும் சுலபமாக இருக்கக் கூடிய ஒரு பகுதியை அவனிடம் சொல்லி,

"எங்கே? இப்ப நான் சொன்னதைத் திருப்பிச் சொல் பார்க்கலாம்" என்றார்.

அவனுக்கு என்ன சொன்னார் என்றே விளங்கவில்லை.

அதன்பின் அதை எப்படித் திருப்பிச் சொல்வது? திருதிரு வென்று முழித்தான்.

குரு பார்த்தார். "இதோ பாரப்பா. உனக்கு வேதம் வராது. வேற வேலை ஏதாவது இருந்தால் போய்ப்பார்" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்துவிட்டார்.

இவன் திரும்பி வந்துவிட்டான். இருந்தாலும் ஆசைவிட வில்லை. சிறிது நாட்கள் கழித்து மறுபடியும் அந்தக் குருவிடம் போனான்.

"ஏனப்பா மறுபடியும் வந்திருக்கிறாய்?" என்று கேட்டார். "போன தடவை வேதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உங்களிடம் வந்தேன். அது எனக்கு வராதென்று சொல்லி அனுப்பிவிட்டீர்கள்.

எனக்கு சுலபமாக வரக்கூடிய மந்திரத்தையாவது கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன்." என்று கேட்டுக்கொண்டான்.

இவன் அங்கே போயிருந்த சமயத்தில் அந்தக்குரு தன்னுடைய மாணவர்கள் சிலருக்கு தர்க்க சாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அதிலிருந்து ஒரு பகுதியை அவனிடம் எடுத்துச் சொன்னார். "என்ன புரியுதா?" என்று கேட்டார். இந்தத் தர்க்கசாஸ்திரத்தை விட முதல் சொன்ன வேதமே அவனுக்கு சுலபமாகத் தெரிந்தது. பேசாமல் திரும்பிப் போய்விட்டான்.

சரி இத்தோடு விட்டானா? விடவில்லை. சிறிது நாட்கள் கழித்து மறுபடியும் திரும்பி வந்தான்.

இந்த சமயத்தில் அந்த குரு 'வியாகரணம்' கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். (இலக்கணம்)

'சரி, இதையாவது எனக்குக் கற்றுக் கொடுங்களேன்' என்று கேட்டுக் கொண்டான்.

அவரும் சளைக்காமல் அதில் ஒரு பகுதியைக் கூறினார். இதை விட இதற்கு முன் கூறிய தர்க்க சாஸ்திரமே சுலபமென்று நினைத்தான் அவன். பேசாமல் மறுபடியும் வெளியே வந்து விட்டான்.

சிறிது காலம் சென்றதும். இவன் மீண்டும் அவரைத் தேடிக் கொண்டு போனான்.

"ஏதாவது மிகவும் சுலபமாகவுள்ள ஒரு மந்திரத்தை எனக்குக் கற்றுக் கொடுங்களேன்" என்றான்.

அவருக்கு ஒரு மாதிரியாகி விட்டது. திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கிறானே" என்று நினைத்தார்.

"இதோ பாரப்பா! ' இங்கேயிருந்து, அங்கே... அங்கேயிருந்து இங்கே! நீ இதையேதான் செய்து கொண்டிருக்கிறாய். அதனால் உனக்கு சுலபமாக வருவது அதுதான் அதையே சொல்லிக் கொண்டிரு' என்று சொல்லி அனுப்பி விட்டார். இவன் என்ன நினைத்தான் என்றால் இப்பொழுது சொன்னது தான் மந்திரம் என்று நினைத்து விட்டான்.

நேராக ஒரு காட்டுக்குப் போய் ஒரு பெரிய பாறையின் முன் உட்கார்ந்தான்.

"இங்கேயிருந்து அங்கே! அங்கேயிருந்து இங்கே" என்று திரும்பத்திரும்பச் சொல்லி ஜெபிக்க ஆரம்பித்தான்.

ஒருநாள் இரண்டு நாட்கள் அல்ல... வருடக்கணக்கில் அப்படிச் சொல்லிக் கொண்டே உட்கார்ந்து கொண்டான். அவனைச் சுற்றி மண்புற்றே உண்டாகி விட்டது. அந்த அளவுக்கு ஆகிவிட்டது.

ஒருநாள் கண்ணை முழித்துப் பார்த்தான். வாய்மட்டும் ஜெபித்துக் கொண்டே இருந்தது.

"இங்கேயிருந்து அங்கே" என்றான். அவ்வளவு தான். அவன் எதிரில் ஒரு பெரிய பாறை இருந்தது. அது அப்படியே பறந்து நீண்ட தூரத்துக்கு அப்பால் போய் விழுந்தது.

அடுத்த படியாக அவன் " அங்கேயிருந்து இங்கே!" என்றான். மறுபடியும் அந்தப் பாறை பழைய இடத்துக்கே போய் விழுந்தது.

வேறொன்றுமில்லை. ஒரே வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொன்னதில் அது பலிக்க ஆரம்பித்தது. இவன் உடனே குருவிடம் ஓடினான்.

"நீங்கள் சொல்லிக் கொடுத்த மந்திரம் பலித்துவிட்டது" என்றான்.

"நான் எங்கே உனக்கு மந்திரம் சொல்லிக் கொடுத்தேன்?" என்றார் அவர்.

பழையவற்றையெல்லாம் மறந்து விட்டார். அதையெல்லாம் எங்கே ஞாபகம் வைத்திருக்கப் போகிறார். "என்ன மந்திரம்? எப்படிப் பலித்தது?" என்று விசாரித்தார்.

உடனே இவன் "இங்கேயிருந்து அங்கே" என்றான். அவ்வளவுதான் எதிரில் உட்கார்ந்திருந்த குரு அப்படியே எழும்பி தூரத்தில் போய் விழுந்தார். மறுபடியும் "அங்கேயிருந்து இங்கே" என்றான். ஆகாயத்துக்கு எழும்பிய குரு மறுபடியும் பழைய இடத்துக்கே வந்து விழுந்தார்.

"இன்னொரு தடவை சொல்லட்டுமா?" என்றான் அவன். குரு பயந்து "வேண்டாமப்பா" என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட ஆரம்பித்தார்.

இந்த அளவுக்கு இவன் ஆனதுக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? குரு விளையாட்டாக சொன்ன ஒரு வாக்கியத்தின் மேல் இவனுக்கு உண்டான விடாமுயற்சி, விசுவாசம், பக்தி இவையெல்லாம் சேர்ந்துதான் ஒரு மந்திரமாக பலித்தது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள விரும்புவது என்னவெனில் முயற்சி திருவினையாக்கும் என்பது தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு (NCICT) யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம் , ஆங்கிலம் பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தியடைதல் வேண்டும். அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம் , ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம் , ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 வயது முதல் 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் முழுப்பெயர், முகவரி , பிறந்த திகதி , தேசிய அடையாள அட்டை இலக்கம் , கல்வித்தகைமைகள் , பயிலவிரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றை குறிப்பிட்டு சுய மாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் , NAITA இல7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (NCICT) க்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (6-4)

# இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட இவ் ஆண்டிற்கான இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரத்தினை சங்க செயலாளர் கந்த சத்தியதாஸன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான பட்டமளிப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பொன்விழா மாநாட்டில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு;

**முதலாம் வகுப்பு**

திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் (வாழைச்சேனை),

**இரண்டாம் வகுப்பு**

ஞா.ஞானலோகேஸ்வரி (வவுனியா),நே.டிஹாசி, யோ.யோகினி, இ.ஜீவகலா, அ.துஷாந்தினி, திருமதி.தவலட்சுமி யோகேந்திரன் , கே.விமலா (வாழைச்சேனை) , ர.யரனியா, சி.நிர்மலசாந்தி (மட்டக்களப்பு), திருமதி.குணாளன் சிவகங்கா (தெகிவளை) , கை.ரஜீதா (தெல்லிப்பளை) , ப.பிரபா, இ.ரஞ்சிதா (புத்தூர்), சு.துஷ்யந்(மட்டக்களப்பு), வை.கோகுலன், திருமதி. சந்திரா கோகிலன், (ஜேர்மனி) , திருமதி. சந்தோசம் ஜெயலக்சுமி (கொழும்பு-6), ந.பிருந்தாவனிதை (சாவகச்சேரி) ,

**மூன்றாம் வகுப்பு**

திருமதி சிவஞானம் சரோஜினி தேவி, சீ.தங்கரெத்தினம் (திருமலை), இ.ரஜிப்பிரியா (கல்குடா), பசுபதி பிரசாத் (யாழ்ப்பாணம்), திருமதி விஜயதர்சினி ஜோதிநாதன் (லண்டன்). (6-4)

# இராசி பலன்

01.07.2010
(ஆனி 17, வியாழக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 1.28 மணிவரை
அவிட்டம் காலை 7.34 மணிவரை
இராகுகாலம் 1.26-2.56 மணிவரை
சுபநேரம் 7.26-8.56 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத நன்மை, பெரியோர் உதவி, தனலாபம், தொழில் விருத்தி. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், சுப செய்தி, நண்பர்கள் சந்திப்பு, அதிகாரம். |
| மிதுனம் | எதிர்பாராத செலவு, ஆரோக்கியக் குறைவு, பிரயாண நன்மை, வீண்பயம். |
| கடகம் | எதிரிகள் தொல்லை, பொருள் விரயம், முயற்சி தாமதம், சரீர பீடை. |
| சிங்கம் | மனோதைரியம், காரிய நன்மை, சயன சுகம், குடும்ப மகிழ்ச்சி. |
| கன்னி | ஆரோக்கியமான நிலை, பகைவர் நேசம், முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| துலாம் | வியாபார நன்மை, கௌரவக் குறைவு, காரியதாமதம், அஜீரண ரோகம். |
| விருச்சிகம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், ரோகநிலை, சுபசெலவு. |
| தனுசு | மனோதைரியம், கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை |
| மகரம் | விவாதம், தொழில் நன்மை, அதிகசெலவு, போசன சுகக் குறைவு. |
| கும்பம் | வெகுமானம், சயன சுகம், போசன நன்மை, மாதர் நட்பு. |
| மீனம் | சோம்பல் நிலை, பிறர் உதவி, காரிய அலைச்சல், தனவிரயம். |

வளவன்

# யாழ்ப்பாண முகாமைத்துவ சம்மேளனத்தின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமைத்துவ சம்மேளனத்தினால் நடத்தப்படும் கருத்தரங்கு தொடரில் ***வீதி அதிகாரசபையின் வீதி அடித்தளத்தின் சீமெந்து பலப்படுத்தல்*** என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணிவரை பருத்தித்துறை வீதி , நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் வீதி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி வி.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்றிட்ட பிரதி இயக்குநர் வி. மோகன் குறித்த விடயம் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 220 |
| தக்காளி | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 200 | 160 | 160 |
| பூசனி | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 50 |
| பயற்றங்காய் | 80 | 70 | 50 |
| லீக்ஸ் | 150 | 140 | 160 |
| பீற்றூட் | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 130 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 |
| போஞ்சி | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 25 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |



இணுவில் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் "தமிழ் இலக்கணப் பூங்கா" நூல்வெளியீட்டு விழாவில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் சு.சதானந்தன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச. மார்க்கண்டு ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஓய்வுபெற்ற அதிபர் க. சிவாஜிக்கு வழங்குவதையும் அருகில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகப் பெருமானின் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு சப்பறமும், 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (6-4)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி 10 மணி பூசை முடிவுற்றதும் 'நலம் தரும் நம்பிக்கை' என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சி.நவரத்தினம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (6-35)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென்றும் இதில். அதிபர்களை தவறாது கலந்துகொள்ளும்படியும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் .கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (6-4)

## நூலக புத்தகங்கள் கையளிப்பு

(அல்வாய்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தில் இருந்து வடமராட்சி கல்வி வலயத்திற்கு ஒரு தொகை நூலகப் புத்தகங்களும் பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்கான தராசு என்பனவும் எடுத்து வரப்பட்டு கணக்காளர் அ.சிறிதரனிடம் கையளிக்கப்பட்டது. (6-19)

## அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் கலை இலக்கிய விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் கலை இலக்கிய விழா எதிர்வரும் 4, 11 ஆம் திகதிகளில் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதல் நாள் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தலைவர் பண்டிதர் பொன் சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் மேலதிக ஓய்வு நிலை செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராஜா கலந்து சிறப்பிப்பதுடன் விசேட அதிதியாக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான், சிறப்பு விருந்தினராக பண்டிதை வ. பத்தினிப் பிள்ளை அம்மா , கௌரவ விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சி. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் பரிசளிப்பு விழா, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களின் காவடி ஆட்டம், **இன்றைய உலகில் எமது மொழியும் பண்பாடும் பெரிதும் பேணப்படுகிறது- பேணப்படவில்லை.** என்னும் விடயம் பற்றி அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கும் சிறப்புப் பட்டி மன்றம், தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களின் பண்பாட்டுக்குழுப் பாடல், பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கிராமிய அபிநயப்பாடல், அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் நாடகப்பிரிவு வழங்கும் வில்லங்கம் நகைச்சுவை நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (6-4)




## நிலையறி பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு ஜி.ரி.இசட் நிறுவனத் தினால் நடாத்தப்படவுள்ள நிலையறி பரீட்சை இன்று காலை 9.45 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி

## பரு.ஹாட்லிக் கல்லூரி அணி 162 ஓட்டங்களால் வெற்றி

(கரவெட்டி)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி விளையாட ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹாட்லிக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.அணி வீரர் பாலமோகனின் அதிரடி துடுப்பாட்ட சதம் மூலமும் சாயித்தனின் சகல துறை ஆட்டத்தினாலும் அவ் அணி 50 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பாலமோகன் 13 பவுண்டரி அடங்கலாக 113 ஓட்டங்களையும் சாயித்தன் 50, கதிர் 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சின் சார்பில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிவீரர்களான பிரதீபன் 3 விக்கெட்டுக்களையும் பானுகோபன், கவிராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டிலக்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

கடின இலக்கை அடையும் நோக்கில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பானுகோபன் 40 ஓட்டங்களையும் பிரதீபன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சின் சார்பில் ஹாட்லிக் கல்லூரி அணிவீரர்களான திவாகர் 4 விக்கெட்டுக்களையும் சாயித்தன் 4விக்கெட்டுக்களையும் பாலமோகன், சதீஸ்ராம், பிரசாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியில் 162 ஓட்டங்களினால், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அணி வெற்றி பெற்றது. (6-24)

## மகா கும்பாபிஷேகம்

புங்குடுதீவு ஊரதீவு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.06 மணிமுதல் 8.54 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை காலை விசேட சந்தி,தர்ப்பணம்,யாகபூசை,விசேட திரவிய ஹோமம், தீபாராதனை, வேதஸ் தோத்திர திருமுறைப் பாராயணம் ஆகியன இடம்பெறவுள்ளதுடன்காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணி முதல் யாகபூசை, பூர்ணாகுதி,அந்தர்பலி,பகிர்பலி,7.25 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம்,கும்ப வீதியுலா என்பன இடம்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (6-4-3)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி ஸ்ரீ மகாகணபதி பிள்ளையார் ஆலய 1008 சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் மாலை வசந்த மண்ட பூசையை தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (4-17)

## செயற்கை அவயவங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)


தென்மராட்சி பிரதேசத்தில் மாற்று வலு தேவையுடைய இளம் சமூகத்தினருக்கான மாற்று செயற்கை கைகள் வழங்கப்பட இருப்பதனால், கை தேவையுடையோர் காலம் தாழ்த்தாது, தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (6-29)


## அபிவிருத்தி கூட்டம்

(துனாங்கிளப்பு)

மறவன்புலோ கிராமத்தை வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் முகமாக, கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றை அமைக்கும் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மறவன்புலோ கிராம சேவைகள் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இப் பகுதிமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி மறவன்புலோ கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (6-37)





யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது. யுனிசெவ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட கல்விப் பொறுப்பாளர் திருமதி ராதிகாதேவி சதீஸ்வரன், இந்நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் ஆசிரிய வள நிலைய முகாமையாளர் எஸ்.ரட்ணசிங்கம் ஆகியோர் நிற்பதையும் கையளிக்கப்பட்ட உபகரணங்களையும் படங்களில் காணலாம்.

## ஆங்கில தினப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளிடையே நடைபெறும் வலய மட்ட ஆங்கில தினப் போட்டி வரிசையில் இன்று காலை 8.30 மணிக்கு கனிஷ்ட சிரேஷ்ட பிரிவினருக்கான ஆங்கில குழுப்பாடல் போட்டியும் தரம் 10-13 வரையான தனிநபர் நடிப்புப் போட்டியும் சாவகச்சேரி இந்து கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென்று தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

* * *

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் நடைபெறும் ஆங்கில தினப் போட்டிகளின் வரிசையில் ஆரம்ப பிரிவு நிலை I, நிலை II மாணவர்களுக்கான ஆங்கில அபிநயபாடல் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறுமென்று தென்மராட்சி வலயகல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# மட்டக்களப்பில் தனது செயற்பாடுகளை நிறுத்தியது யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் கிழக்கு மாகாணத்தில் தனது பணிகளை குறைத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது. இதன்படி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த அந்த அமைப்பின் அலுவலகம் மூடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை கால மும்போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் , அதனால் இடம்பெயர்ந்தவர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையத்தின் அலுவலகம் உதவி வந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளாக இடம்பெயர்ந்திருந்த நிலையில் இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிவிட்டதாகவும் அதனாலேயே தமது பணிகளை கிழக்கு மாகாணத்தில் குறைத்துக்கொள்வதாகவும் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி மைக்கேல் ஸ்வாக் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பியிருந்தாலும் பல காலமாக அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் உதவிகளை தமது அமைப்பு செய்து வந்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற உச்சக்கட்டப்போரின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் இடம்பெயர நேர்ந்ததுடன் ஏனைய பகுதிகளில் இருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் இந்த மாவட்டத்துக்கு வந்தனர்.

மட்டக்களப்பு ,அம்பாறை மாவட்டங்களில் இன்னமும் இரண்டாயிரம் பேர் வரை மீளக் குடியேற்றப்படாத நிலையில் உள்ளனர் என்றும் அவர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் கண்ணி வெடி அகற்றும் பணி முழுவது மாக முடியவில்லை என அரசு கூறுவதே இவர்கள் தமது இடங்களுக்குச் செல்வதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கையின் வடக்கே இன்னமும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் 54 ஆயிரம் மக்களின் நலன் பற்றியும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று மீண்டும் வாழ்வது தொடர்பாகவும் தாங்கள் தற்போது கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது பணிகளை நிறுத்திக்கொண்டு அலுவலகத்தை மூடுவது தங்களுக்கு கவலை அளிப்பதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு இன்னும் முழுமையான வாழ் வாதாரங்கள் ஏற்படவில்லை என்றும் அதுவரை ஐ.நா.வின் அகதிகளுக் கான ஆணையம் போன்ற அமைப்புகளின் ஆதரவு தேவைப்படுகிறது எனவும் அவர் தமது கருத்தைத் தெரிவித்தார். (6)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES &

EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

BCHS

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து
எமது நிறுவனத்தின்மூலம் Student Visaவினைப் பெற்று
London (UK) சென்ற அனைத்து மாணவர்களையும்
பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

Eisc

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே இதுவரை (UK) London Visa பெற்று சென்ற பல மாணவர்களிற் சிலர்




இதுவரை எமது சேவையினூடாக இலங்கையிலிருந்து 1200க்கு மேற்பட்ட மாணவர்கள் LONDON ல் உயர்கல்வியினைக் கற்பதற்காக UK Visa வினைப் பெற்றுச்சென்றுள்ளார்கள். நீங்களும் அவர்கள்போற் சென்று கல்விகற்று முன்னேற வேண்டுமா?... உங்களின் நல்ல எதிர்காலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்....

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550, 0773501499

No.30 1/14, W A De Silva Mw,
Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935


# சட்டவிரோதமான முறையில் சொகுசு வாகனங்கள் இறக்குமதி

(கொழும்பு)

90 வீதமான சொகுசு வாகனங்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவை என அண்மைய ஆய்வுத் தகவல் ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

அநேகமாக தற்போது பாவனையில் உள்ள 90 வீதமான சொகுசு வாகனங்கள் சட்டவிரோதமான வழிகளில் கொண்டுவரப்பட்டவை என இலங்கை மோட்டார் போக்குவரத்து பொலிஸார் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்படும் 10 வாகனங்களில் 9 வாகனங்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6)

# இராணுவ நீதிமன்றில் ஆஜராகுமாறு அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு உத்தரவு

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவி ரட்ன ஆகியோர் இராணுவ நீதிமன்றில் சாட்சியம் அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 12ஆம் திகதி குறித்த இருவரும் இராணுவ நீதிமன்றில் சாட்சியமளிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணுவத்தில் கடமையாற்றிய காலத்தில் ஜெனரல் சரத்பொன்சேகா அரசியலில் ஈடுபட்டாரா என்பது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக குறித்த இருவரிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி குறித்த இருவரும் இராணுவ நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (6)

# 2009/2010 கல்வி ஆண்டுக்கு தெரிவான மாணவர்களுக்கு பதிவுகள் இடம்பெறவுள்ளன

நேற்றைய தொடர்ச்சி...

**சித்தமருத்துவம்**

என். நிதர்சன்,எம்.நிரோஷா, எஸ்.சுகிர்த ரூபன், ரி.ஜிலக்ஷனா, ரி.தர்சினி, எஸ்.விதுர்ஷன், வி.கோகுலவாசினி, எஸ்.கஜந்தி, கே.சிவதன்சனி, ஆர்.ஹரிசுதன், ரி.குண நாதன், வி.நிதர்சன்,வை.ஜீவன் ,எம். வினோதினி,எஸ்.திருக்குமரன், ரி.பிரதாயினி, எஸ். கயல்விழி, எஸ்.நிவேதினி, ஜெ.காஞ்சனா,எஸ். லக்ஷனா,ஜெ. செந்தில்செல்வன் ஜெ.பூங்குழலி, எம்.துவாரகா,எஸ்.கௌசியா,வி. டினேஸ்குமரா ,பி.வள்ளிதர்சினி, எஸ்.கீர்த்தனன், கே.வினார்த்தன் ,எஸ்.கீர்த்தினி.

எஸ்.தாரணி, ஆர்.ரவித்தா, என்.சயனுதா,எம்.கனிமொழி,ஏ.டிரேயன்,ஆர்.மனோராஜ், எஸ்.டினோசன்,வி.யேசு,ஏ.நிக்லா,ஏ.பாத்திமா ஷபீலா, என். அபிலாசினி, எஸ். அனோஜன்,ஏ.மொகமட் நிவாஸ்,வி.தாட்சாயினி, வை.கயந்தன்,வி.சிவதீசன்,எஸ். சிவதர்சனா, ஆர்.குயின்றன், ஏ.பாத்மா சாயிலா, ரி.டிலானி, ஜெ.ஜெனோஜினி, எம்.ஜ.ஜ.ஜகான், ஜெ. வசந்தினி, ஜ.எம்.எவ்.எஸ். ஷன்வறா, பி.கிருத்திகா, ஆர்.ஜெயசுதா,என் சங்கீதா, எம்.ஜ.ஞானகரன்,எஸ். ரஜிதா, எம்.ஏ.ஆர். கே. பாத்மா, எஸ்.ஜனுப்பிரியா,வி.தனுஷா, ஆர்.சுகந்தன்,யூ.கீதராணி,கே.தரகா,கே.வக்கீரன், ஆர்.நிஜன், ஜெ.டி.தேவநேசன், ரி.உமா பிரியா, என்.பாத்மாருஷ்னா ,வி. மிராஜ்.

**சங்கீதம்**

பி.சந்திரிக்கா,ஜி.பத்மரோசினி, கே. அனோஜா, எஸ்.செல்வரஞ்சினி, ரி.தர்மிகா, எஸ்.மயூரி, கே. சிந்துஜா, பி.பிரியதர்சினி, என்.அனுசா, எஸ்.நித்தியா, வி.தனுசாந்தி, எல்.லொ.சுபாங்கி, ரி.பவானுஜா, பி.பிரிய தர்சினி, கே.ஜெயராதை, எஸ்.துசாந்தி, எஸ்.சுகன்ஜா, பி.அனுசிகா, எஸ்.தர்சிகா, எம்.யசோதா, எம்.நாகராணி, இ.ஜே.ஜ.பி.எவ். ஜீன், ஆர்.இந்துஜா, கே.அனுசன், எஸ். ராகவத்தனி, பி.தாதேயுகன்னியா, பி.பவித்திரா, என்.அபிலஜா, என்.அர்ச்சனா, கே. தமிழ்ச்செல்வி, எஸ்.சுஜீதா, ஆர்.ரேவதி, ரி.மயூரி, கே.ஜெயப்பிரதா, என்.ஜே.ரம்லன், எஸ்.சிவவிஜி, கே.ருக்ஷி, ஆர்.சுரசாகித்தியன், வை.பிரியந்தினி, வை.கௌசிகா, கே.சுவர்ன்னா, யு.கலைச்செல்வன், ஜ.சந்திர குமார், ஏ.அகிதா, எம்.மகில்யா, பி.ஜமீரா, ஏ.அகிலா.

பி.வினோதா, கே.கிருசாந்தி, ஆர். யசோதனா,எஸ்.யசோதனா, எஸ்.கோகிலம், என்.பாசினி, என்.சிறிவித்தியா, எஸ். கஜனிகா, எல்.கஜித்தா, எம்.கோணேஸ்வரி, ஆர். ராதிகா, எஸ்.பிரியங்கா.

எஸ்.நர்மஜா, பி.பேபிஜந்தினி, வி.யசிப் பிரியா, ஆர்.தனுசா, எம்.மனுசங்கர், வி.பிரதீபா, ஏ.சோபிகா, பி.கரிகரன், வி.சகாஜரூபி, எஸ்.கேசலா, கே.சரணியா.

எஸ்.பபிதா, என்.நிரஞ்சலா, எஸ்.சிவலோஜினி, ஏ.அமிர்தசிந்துஜன், ஆர்.ரஜனி, எஸ்.ரஜந்தா, ஆர்.அனோஜா, எஸ்.ஜீவந்தினி, ஆர்.ராஜ்மேனகா, கே.சுரேந்திரன் , எஸ்.அனுசியா, எஸ்.கிருசாந்தி, ஆர்.நிரோஜனா, பி.டுஜந்தினி, யூ.மதனிகா, எஸ்.கார்த்திகா, எம்.தாட்சாயினி, எஸ்.சிந்து, ஆர்.சயரூபினி, ஆர்.கே.கிருஸ்ணவேணி, எஸ்.ஜே. நிலூசினி, ஜே.சுபாகுறூஸ், எல்.சமீனா கிறேஸ், ஏ.கலாரஜனி, எம்.சுகன்யா, பி.அனுசியா, ரி.மதன்ராஜ், வை.சங்கீதா.

**சட்டம்**

பி.சுதர்சன், வி.ஹசீனா, என்.எம்.சர்யூன், பி.ஆனந்தவதனி, எல்.தனுசாநந்தினி, எஸ். ரம்யா, ஜி.சரா, ஏ.வி.பிரியதர்சனா, டபிள்யு. டினித்தி சந்ரேகா, எம்.எம். ஆர்.அகமட், சி.எம்.விஜயசிங்க, எஸ்.சர்ணியா, எஸ். ஏஞ்சலா விதுசினி, டி.எம்.எச். ஜி.ஏ.டி.வி. குமாரி, எச்.எம்.எ.எஸ்.குணதிலக, பி.எச். டபிள்யூ.டி.எல்.சமரசிங்க, யூ.பிரசாந்தினி, எஸ்.சி.தனஞ்சினி, ஏ.எச்.எம்.ரிஸ்வான்.

எஸ்.எல்.எவ்.பார்த்திமா பாவசா, எஸ். தர்மிகா, எஸ்.தனுசா, எஸ்.அபினயா, எம். என்.எவ்.பார்த்தீமா ரிகாசா, ஏ.டபிள்யூ. குணவர்த்ன, ரி.பிரியதர்சினி, ஆர்.தினுஷா, கே.எம்.கே.சஜீவனி, எம்.எவ்.ரிவ்கா.

டி.எம்.எம்.எச்.திஸ்ஸநாயக்கா ,ரி.கிருசாந், ஏ.ஆர்.பார்த்தீமா ஷரீனா, பி.ஏ.ஜி. பூர்ணிமா, பி.நிஜந்தா, எம்.விதுசினி, யூ. ரசிந்தா, ஜி.அபிராம், பி.அல்பிரட்சூசை, ஏ.டி. சேன நாயக்க, டபிள்யூ. எம்.ஜே. இந்திரஜித், எ.எச். நூபாநத்ரின், ஜெ.சர்மிளா, டபிள்யூ. ஜெயலக்ஷி, வி.இ.என். தேவவிதுரன், எஸ். சோபிதா, ஏ.எல்.எஸ்.ஹர்சனி, கே.ஜி.எல். என்.மதுஷானி, பி.தர்சாயினி, ஆர்.என். பிறந்தா, ஆர்.தர்சா, கே.துஷ்யந்தினி. (6)

## அரச மொழிக் கொள்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை

### தேசிய மொழி மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சு

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகள் உரிய முறையில் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தாத காரணத்தால் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதாகத் தேசியமொழி மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ் மொழியைப் பேசுபவர்கள் அரச நிறுவனங்களுக்குச் சென்று முறைப்பாடுகளைத் தெரிவிக்கும்போது அவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவது இனங் காணப்பட்டுள்ளதாகத் தேசிய மொழி மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் இது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் சுற்று நிருபத்தினூடாக அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அந்த விதிமுறைகள் குறித்து அதிகாரிகளுக்கு எவ்வித தெளிவும் காணப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (6)

## 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி ம.ம.வி.அணி வெற்றி

(கரவெட்டி)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் , யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியானது நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இப்போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மோதிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி கிருசிகேசனின் சிறப்பான துடுப்பாட்டத்தாலும் தனுஜனின் துல்லியமான பந்து வீச்சாலும் 35 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தலைவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இதற்கிணங்க, முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியால அணி கிருதிகேசனின் சிறப்பான அரை சதத்தின் மூலம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றன. இதில் கிருதிகேசன் 62, அனுசாந் 32 ஓட்டங்களைப் பெற்றனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி பந்துவீச்சின் சார்பில் றொக்சன் 5, தர்சன் 3, அஜிந்தன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி தனுஜனின் அபார பந்துவீச்சினால், விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தது. இறுதியில் 39.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சுரேஸ் கீதன் 53, அஜிந்தன் 23,விபூசன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியின் சார்பில் தனுஜன் 4 விக்கெட்டுக்களையும் கஜதீபன் 3 விக்கெட்டுக்களையும் திருபரன் 2 விக்கெட்டுக்களையும் அனுசாந் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

(6-24)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 01 1988

ஆழியின் பிடியில் 19 05 2010



கடலில் காவியமான

### செல்வன் நிர்மலானந்தன் நிராஜ்

கடந்த 19.05.2010 புதன்கிழமை அன்று தொண்டைமானாறு மயிலியதனைக் கடலில் நண்பர்களுடன் நீராடி நீந்தி விளையாடச் சென்ற எமது செல்வம் திரும்பிவராமல் எம்மையெல்லாம் ஆளாத்துயரில் அமிழ்த்தி அவ்வுலகம் சென்றிருப்பார் எனும் பரிதாப முடிவுக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

எமது இந்து சமய விழுமியங்களுக்கு இணங்க எதிர்வரும் 02.07.2010 வெள்ளிக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை தீர்த்தக் கடற்கரையில் காலை 6.30 மணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் எமது மயிலியதனை இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். எம்செல்லத்தின் துன்பியல் நிகழ்வையிட்டு நேரில் சமுகம் தந்தவர்கள் மற்றும் பல வகைகளிலும் எம்துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மயிலியதனை, தொண்டைமானாறு

தகவல் நிர்மலானந்தன் (தந்தை)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 05 11 1952

விண்ணில் 01 07 2009



அமரர்

### இரத்தினம் வைகுந்தவாசன்

(களஞ்சிய காப்பாளர், பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்)

தந்தையிடம் சென்றாய் என்று இங்கே
தாய் அவள் கலங்குகின்றாள் தம்பி
சிந்தையிலே நிறைந்த நல்லாள் பிரிவால்
சிறகொழந்த பறவையாகி தவிக்கின்றாள் ஐயோ
தந்தையின் வதனமதை தரணியிலே காணாது
பிஞ்சுகள் மூன்றும் பெருந்துயர் கொண்டதுவே
உந்தனது பிரிவால் உடன் பிறந்தோர் உறவுகளும்
நொந்து படும் வேதனையை நீ அறிய மாட்டாயோ!

47, பிறவுண் வீதி
கொக்குவில்.

குடும்பத்தினர்

# மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய இந்தியாவின் விசேட நிபுணர்கள் குழு

## மீள்குடியேற்ற பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்று வரும் மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராய இந்தியாவின் விஷேட நிபுணர்கள் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை சந்தித்துள்ளது. இம் மீள் குடியேற்ற பணிகளுக்கு இந்திய அரசாங்கம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், யுனிசெப் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளும் நிறுவனங்களும் பல வழிகளில் உதவி களை வழங்கியுள்ளன.

அடுத்த இரண்டு மாதத்திற்குள் முகாம்களில் எஞ்சியுள்ள அனைத்து மக்களும் மீள்குடியமர்த்தப்படு வர். இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் வாழ்வாதாரத்திற்கு தேவையான வளங்களை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ தடைகள் என்பவை தொடர்பாக பாதுகாப்பு செயலாளரினதும் ஜனாதிபதியினதும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வன்னியில் மக்கள் தமது தொழில்களை சுமூகமான முறையில் செய்து கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கடலில் மீன் பிடித்தலும் காடுகளுக்குச் சென்று விறகுகளை வெட்டவும், விவசாயம் செய்யவும் அனுமதி பெறுவதில் எவ்வித மான தடைகளும் கிடையாது என்று தெரிவிக்கப்படுகிறது. (6)

# கச்சாய் உதய சூரியன் கிராமத்துக்கு ஈ.பி.ஆர்.எல். எவ்.கட்சித் தலைவர் விஜயம்



(சாவகச்சேரி)

கச்சாய் உதயசூரியன் கிராமத்துக்கு அண்மையில் விஜயம் செய்த பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் தலைவர் அ. வரதராஜப் பெருமான் அப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

இதேவேளை அப்பகுதியில் 1990ஆம் ஆண்டில் இருந்து தமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் இதற்கு நடவடிக்கை எடுத்து தமக்கு மின்சாரத்தினைப் பெற்றுத் தரும்படி மக்கள் கோரிக்கையினை முன் வைத்தனர்.

இந்த சந்திப்பில் இக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. மோகன், தென்மராட்சி அமைப்பாளர் சி.முரளி ஆகியோர் கலந்துகொண்டனர். (6-37)

# யுனிசெப் நிறுவனத்தினால் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட 22 பாடசாலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டு உபகரணங்களை பெறும் பாடசாலைகளின் விபரம் வருமாறு,

கொக்குவில் ஸ்தான சி.சி.ரி. எம்.எஸ், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம், முத்துத்தம்பி மகா வித்தியாலயம், கோண்டாவில் இந்து வித்தியாலயம், கோண்டாவில் சி.சி. ரி.எம். பாடசாலை, சன்மார்க்க மகாவித்தியாலயம், கோண் டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை, கொக்குவில் ஞான பண்டிதா வித்தியாலயம், நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை, அச்செழு மெ.மி.த.க பாடசாலை, ஊரெழு கணேஷ வித்தியாலயம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம் பப் பாடசாலை, கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை, சென்.றொச்செஸ் றோ.க. வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கொக்குவில் கிழக் குநாமகள் வித்தியாலயம், பாசை யூர் சென்.அன்ரனிஸ் றோ.க.பாட சாலை. (6-4-7)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் உக்ரேய்னுக்கு பயணமாகியுள்ளார். இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவும் கியூ விமான நிலையத்தைச் சென்றடைந்தபோது வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# 01.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1798- நெப்போலியனின் படைகள் எகிப்தை அடைந்தன.
- 1825- ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.
- 1851- அவுஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூசவுத் வேல்சில் இருந்து பிரிக்கப்பட்டது.
- 1862- ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது.
- 1867- பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம் ,1867 கனடாவின் அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது ஜோன் மாக்டொனால்ட் பிரதமராகப் பதவியேற்றார்.
- 1873-பிரின்ஸ் எட்வேர்ட் தீவு கனடாக் கூட்டமைப்பில் இணைந்தது.
- 1876-சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.
- 1916- முதலாம் உலகப் போர் பிரான்சில் சொம் என்ற இடத்தில் இடம் பெற்ற சண்டையின் முதல் நாளில் 20 ஆயிரம் பிரித்தானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 40 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.
- 1921-சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932- ஏபிசி(அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.
- 1933- சீனர்களின் குடியேற்றத்தை கனடா நாடாளுமன்றம் தடை செய்தது
- 1947- இந்தியாவுக்கு முழு விடுதலையை ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.
- 1960- இத்தாலியிடம் இருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.
- 1960- கானா குடியரசானது.
- 1962- ருவாண்டா விடுதலை அடைந்தது.
- 1962- பெல்ஜியத்திடம் இருந்து புருண்டி விடுதலை அடைந்தது.
- 1967- ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1976- மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.
- 1978- அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொது நலவாயத்துக்குக் கீழ் சுயாட்சி பெற்றது.
- 1979- சோனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.
- 1990- கிழக்கு ஜெர்மனி டொச் மார்க்கை தனது நாணய அலகாக ஏற்றுக் கொண்டது.
- 1991- பிராக்கில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் வார்சா ஒப்பந்தம் அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.
- 1997- மக்கள் சீனக் குடியரசு ஹொங்கொங்கில் தனது ஆட்சியை ஆரம்பித்தது. 156 ஆண்டு கால பிரித்தானிய குடியேற்ற ஆட்சி முடிவடைந்தது.
- 2002- சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
- 2002- தெற்கு ஜெர்மனியில் இரண்டு விமானங்கள் வானில் மோதியதில் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004- காசினி - ஹியூஜென்ஸ் விண்கலம் சனிக்கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.
- 2006- கொழும்பில் சுதந்திர ஊடகவியலாளன சம்பத் லக்மால் சில்வா இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்.

- 1924- தி.ச.வரதராசன் ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர் (இ.2006)
- 1927- சந்திரசேகர்,11 ஆவது இந்தியப் பிரதமர்
- 1935- டி.ஜி.எஸ் தினகரன்,இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புனர்.
- 1961- கல்பனா சாவ்லா விண்வெளி வீராங்கனை(இ.2003)
- 1961- டயானா,வேல்ஸ் இளவரசி(இறப்பு.1997)
- 1961- கார்ள் லூயிஸ்,அமெரிக்க ஓட்டவீரர்

### இறப்புக்கள்

- 1965-வாலரர்ஹமொண்ட் -ஆங்கில துடுப்பாளர் (பி.1903)
- 2001-நிக்கலாய் பாசொவ், ரஷ்ய இயற்பியலாளர்,நோபல் பரிசு பெற்றவர் (பி.1922)
- 1971- வில்லியம் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி.1890)

**1881- உலகின் முதலாவது அனைத்துலக தொலை பேசித் தொடர்பு கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.**



# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

தரம்-13 | முன்னோடிப் பரீட்சை | ஆனி 2010

### அரசியல் மூலதத்துவங்கள் - II-I நேரம் : 1 மணி

**ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01 - 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று வினாவின் தலைப்புக்குப் பொருத்தமற்றதாகும். பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

01.பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சிக் காலத்துடன் தொடர்புடையவை,
1.இராஜ காரிய முறை அறிமுகம் செய்யப்பட்டமை.
2.இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிமுறையின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தது.
3.கிராமிய விவசாயம் புறக்கணிக்கப்பட்டது.
4.பெருந்தோட்டப் பயிர்செய்கையின் வளர்ச்சியால் இரட்டைப் பொருளாதாரம் தோற்றம் பெற்றது. (.................)

02.கோல்புறுக் ஆணைக்குழுவால் முன்மொழியப்பட்டவை,
1.கண்டியும் கரையோர மாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டமை.
2.வர்த்தகத்தில் அரசின் ஏகபோக உரிமை தொடர்ந்தும் பேண வலியுத்தப்பட்டது.
3.சட்ட நிரூபணசபையும் சட்ட நிர்வாகசபையும் தாபிக்கப்பட்டமை.
4.இலங்கையரை சிவில் சேவைக்கு அனுமதித்தல். (..........................)

03.கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள்,
1.மத்திய வகுப்பாரின் தோற்றத்துக்கு வழிவகுத்தது.
2.ஐக்கிய நிர்வாக முறையின் அபிவிருத்திக்கு வழிவகுத்தது.
3.சுதந்திரமான நீதித்துறையின் அபிவிருத்திக்கு வழிவகுத்தது.
4.வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை முன்மொழிந்தது. (......................)

04.1924 ஆம் ஆண்டின் அரசியல்யாப்பு,
1.சட்டசபையின் உறுப்பினர் எண்ணிக்கையை 49 ஆக உயர்த்தியது.
2.சபையினரால் தெரிவு செய்யப்பட்ட உபதலைவர் சபையின் தலைவராக கடமையாற்ற வழிகுத்தது.
3.உத்தியோகப்பற்றற்ற உறுப்பினரைவிட உத்தியோக சார்புடையோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.
4.சடட நிர்வாகசபை தொடர்ந்தும் சட்ட சபைக்கு கட்டுப்படாத ஒன்றாக விளங்கியது. (..........................)

05.1833 இல் இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை,
1.சுதந்திரமான தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கான தளத்தினை ஏற்படுத்தியது.
2.பெருந்தோட்டத் துறைக்கு தேவையான உள்நாட்டு ஊழியம் தடையின்றிக் கிடைப்பதற்கு வழிசெய்தது.
3.மரபுரீதியான நிலவுரிமை முறையினை முடிவுக்குக் கொண்டுவந்தது.
4. இலங்கையில் ஐரோப்பிய முதலீட்டினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பினைஏற்படுத்தியது. (....................)

06.பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய மத்தியதர வகுப்பு,
1.பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியும் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சியும் சுதேசி களிடையே இவ்வகுப்பு தோன்ற வழிவகுத்தது.
2.சிவில் சேவைப் பதவியில் ஆர்வம் காட்டியது.
3.இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்திருப்பதை எதிர்த்து பிரதேசவாரியாகப் பிரதிநிதித்து வத்தை வலியுறுத்தியது.
4.1910 இலிருந்து சட்டசபை சீர்திருத்தங்களுக்கு காரணமாய் அமையவில்லை. (............................)

07.டொனமூர் ஆணைக்குழு,
1. வகுப்புவாத அரசியலை தளற்சியடைய செய்ய விரும்பியது.
2. அரசாங்க சபையிடமிருந்து நிர்வாக சட்ட ஆக்க கடமைகளை எதிர்பார்த்து
3.இரட்டை நிர்வாகத்தை கொண்ட ஓர் அரசாங்கத்தை தாபித்தது.
4.இலங்கையருக்கு சுயாட்சி தொடர்பான அறிவினை வழங்க எதிர்பார்த்து (,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,.........)

08.டொனமூர் ஆணைக்குழு பூரண பொறுப்பாட்சிக் கோரிக்கையினை மறுத்தமைக்கான காரணங்கள்,
1.சமூகப் பல்தன்மையால் உருவாகிய கூர்மையான பிளவுகள்.
2.அரசியற்கட்சிகள் வளர்ச்சியடையாமை
3.சமூகத்தில் பூரண பொறுப்பாட்சி பற்றிய பொதுவிருப்பு நிலவாமை
4.சிறுபான்மையினத்தவரின் எதிர்பார்ப்புக் காரணமாகும். (.......................)

09.டொனமூர் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்கசபை,
1.61 உறுப்பினர்களைக் கொண்டது.
2.சபாநாயகரால் தலைமை தாங்கப்பட்டது.
3.சட்டம் மற்றும் நிர்வாகக் கடமைகளைப் பெற்றிருந்தது.
4.சட்டவாக்கத்தில் இறைமை பெற்றிருந்தது. (...............................)

10.டொனமூர் அரசியலமைப்பின் கீழ் தேசாதிபதிக்கு,
1. அரசாங்க சபையைக் கலைக்கும் அதிகாரம் காணப்படவில்லை.
2.அரசாங்க சபை நிறைவேற்றிய மசோதாக்களை இரத்து செய்யும் அதிகாரம் பெற்றிருந்தது.
3.சிறுபான்மையினருக்குப் பாகுபாடு காட்டும் மசோதாக்களை இரத்துச் செய்யும் அதிகாரம் இருந்தது.
4.பிரித்தானிய முடியினதும் அரசாங்கத்தினதும் பிரதிநிதியாக இருந்தமை. (...............................)

**11 - 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்று வினாவின் தலைப்புக்கு பொருந்துகின்றது. அச்சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.**

11.இலங்கையின் இடதுசாரி இயக்கம்,
1.வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற மாக்சிசசிந்தனைகளால் கவரப்பட்ட தீவிரவாத இளைஞர் குழுவால் ஆரம்பிக்கப்பட்டது.
2.கிராமிய விவசாயிகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டது.
3.இடதுசாரிகள் அரசாங்கத்தில் என்றும் அங்கம் வகித்ததில்லை.
4. தொழிற்சங்க உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு எதிராக ஒழுங்குபடுத்தப்பட்டது. (...............................)

12.1910 - 1924 காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட சட்ட சபைச் சீர்திருத்தங்கள்,
1.நீதித்துறையின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தின.
2.சட்டசபையில் உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவர்களின் அதிகாரங்களை மேம்படுத்தின.
3.ஐரோப்பிய பயிர்செய்கையாளர்களுக்கு கூடுதல் பிரதிநிதித்துவத்தை வழங்கின.
4.பிரதிநிதித்துவ ஜனநாயகமுறையின் வேறு பண்புகளையும் அறிமுகம் செய்தன. (..............................)

13.டொனமூர் யாப்பின் கீழ் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்,
1.அரசாங்க சபையால் நியமிக்கப்பட்டனர்.
2.பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காவல் நாய்களாகக் கருதப்பட்டனர்.
3.அதிமுக்கிய நிர்வாக அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை.
4.ஏழு நிர்வாகக் குழுக்களுடனும் ஒன்றிணைந்து கருமமாற்றினர். (...............................)

14.இலங்கைத் தேசிய இயக்கம்,
1. தீவிரத் தன்மைபொருந்திய ஒரு மகாஜன இயக்கமாக இருந்தது.
2.தேசாதிபதியின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு காரணமாகியது.
3.1915 இல் நடைபெற்ற சிங்கள முஸ்லீம் கலவரம் இவர்களின் உருவாக்கத்துக்கு காரணமாக அமையவில்லை.
4.அரசியல்திட்ட சீர்திருத்தத்தை வேண்டிநிற்றமை. (..............................)

15.1910 இன் அரசியல்யாப்பு சீர்திருத்தம்,
1.தேசாதிபதியின் அதிகாரத்தினை தீவிரமான முறையில் குறைத்தது.
2.கல்வி மற்றும் சொத்துத் தகுதிகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை அறிமுகம் செய்தது.
3.உயர்ந்தோர் குழாம் இலங்கை அரசியலில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கவில்லை.
4.சட்ட நிருபண சபையும் சட்ட நிர்வாக சபையும் சட்டத்தை உருவாக்குவதிலும் சட்டத்தை அமுல்படுத்துவதிலும் ஒருங்கிணைந்து கருமமாற்றியது. (........................)

16.இலங்கைத் தொழிற்சங்கம்,
1.இடதுசாரித் தன்மை பொருந்திய தொழிலாளர் வர்க்க ஒருங்கிணைப்பாக இருந்தது.
2.ஏ.ஈ.குணசிங்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
3.இலங்கைத் தேசிய காங்கிரசின் தொழிற்சங்கமாக இருந்தது.
4.நகர்ப்புறத் தொழிலாளர்களையும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களையும் ஒன்றிணைத்த அமைப்பாக விளங்கியது. (...............................)

17.சோல்பரி அரசியல் யாப்பு,
1.இறைமை பொருந்திய பாராளுமன்றத்தை அறிமுகம் செய்தது.
2.மந்திரிசபை அரசாங்க முறையை அறிமுகம் செய்தது.
3.இலங்கையரை அரசின் தலைவராக்கியது.
4.ஓரங்க பாராளு மன்றத்தை அறிமுகம் செய்தது. (...............................)

18.சோல்பரி யாப்பின் கீழ் மகாதேசாதிபதி,
1.இலங்கைப் பிரதமரின் சிபார்சின்படி முடியினால் நியமிக்கப்பட்டார்.
2.செனட்சபை கூட்டங்களுக்குத் தலைமைதாங்கினார்.
3.இலங்கைப் பிரதமரால் பதவி நீக்கக்கூடியவராக இருந்தார்.
4.பதவிக் காலம் வரையறை செய்யப்பட்டிருந்தது. (........................................)

19.சோல்பரி முறையின்கீழ் பிரதமமந்திரி,
1.மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டார்.
2.பாராளுமன்ற தேர்லில் பெரும்பான்மைபெற்ற கட்சியின் தலைவர் மகாதேசாதி பதியால் நியமிக்கப்பட்டார்.
3.மகாதேசாதிபதியை நியமனம் செய்யும் வாய்ப்பினைப் பெறவில்லை.
4.பாராளுமன்றத்தின் பெரும்பான்மையை இழந்தாலும் தொடர்ந்து பதவி வகிக்க முடியும். (.........................)

20.அரசாங்க சேவை ஆணைக்குழு,
1.அரசாங்க சேவை உத்தியோகத்தர்களது நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், பதவியுயர்வு என்பவற்றுக்குப் பொறுப்பானது.
2.ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது.
3.பதவிக்காலம் 6 வருடம்
4.இதன் தலைவராக மகா தேசாதிபதி கடமையாற்றினார். (.....................................)

**21-30 வரையுள்ள வினாக்களுக்குரிய கூற்றுக்களுள் மூன்று சரியானவையாகும். சரியான கூற்றுத் தொகுதியைத் தெரிவு செய்க.**

21.1972 அரசியல் யாப்பு,
A முத்துறைகளில் நீதித்துறையை பலமான துறையாக்கியது.
B அவசரகால நிலைமைகளில் பிரதமரின் அதிகாரங்களைப் பலப்படுத்தியது.
C இலங்கையின் முதலாவது சுதேச அரசியல்யாப்பாகும்.
D இலங்கையை சுதந்திரமும் இறைமையும் சுயாதீனமும் உடைய அரசாகப் பிரகடனப் படுத்தியது.


1. ABC  2. BCD  3. ACD  4. ABD

22.1972 யாப்புக்கு அடிப்படையாக அமைந்த மூலக்கொள்கை,
A பாராளுமன்ற இறைமைக் கோட்பாடு
B வலுவேறாக்கக் கோட்பாடு
C பொதுமக்கள் இறைமைக் கோட்பாடு
D ஜனநாயக சோசலிசக் கோட்பாடு

1. BCD  2. ABC  3. ABD  4. ACD

# தமிழ் மந்திரங்களே திருமுறைகள் 4

## சிவத்தமிழ் அன்னையின் நினைவுப் பேருரை



தேவார திருவாசகம் சம்பந்தமாக மேற்கத்திய ஆராய்ச்சிகளின் முடிவுகளை இன்னமும் என்னால் பெறமுடியவில்லை என்றாலும் எனது மனைவியின் சுகயீனத்தின் போது நடந்த ஒரு சம்பவத்தை என்னால் விபரிக்க முடியும். புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு மரணப்படுக்கையில் இருந்த எனது மனைவியார் கடைசிக் காலங்களில் உடல் நோவினால் வருந்தினார். நோவைக் குறைக்கும் மருந்துக்கள் கொடுக்கப்பட்டாலும் சில தருணங்களில் அவற்றைக் கொடுக்கும் நேரம் வரும் வரையில் காத்திருக்க வேண்டியிருந்தது. அப்போது உடல் நோ அவரை வெகுவாக வாட்டியது. ஒரு நாள் ''*கூற்றாயினவாறு விலக்ககலீர்*'' என்ற அப்பர் தேவாரத்தை நவரோஸ் இராகத்தில் (பண்-கொல்லி) அழுதழுது உருக்கமாக அவர்முன் பாடினேன். பாடி முடிந்ததும் என் மனைவியார் எப்படியோ தெரியவில்லை நோ நன்றாகக் குறைந்துள் ளது என்று கூறினார். சூழலை மாற்றக் கூடிய மந்திர சக்தி அந்தக் தேவாரத்திற்கு இருந்ததென்பதை அப்பொழுது உணர்ந்து கொண்டேன்.

' '' *திரயம்பகம் யஜாமகே*'' என்று தொடங்கும் மகாமிருத்துஞ்ஜய மந்திரத்தைப் பற்றி நீங்கள் எல்லோருமே கேள் விப்பட்டிருப்பீர்கள். வடமொழியில் இருக்கும் அந்த மந்திரத்தின் சக்தியை உணரும் வாய் ப்பு எனக்கு ஒருமுறை கிடைத்தது. வெள்ளவத்தை சைவமங்கையர் கழக தலைமை ஆசிரியையாக பல வருடகாலம் பதவி வகித்த செல்வி நாகம்மா காசிப்பிள்ளை அவர்கள் சுகவீனமுற்று இருந்தார்கள். ஒருநாள் அவர் அநேகமாக அன்றிரவு இறந்து விடுவார் என்று டாக்டர்கள் கூறியிருந்ததால் நான் அவர் வீட்டுக்கு அன்று மாலை விரைந்தேன். அதே போல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிமார் ஆத்ம கணானந்தஜீயும் இராஜேஸ்வரானந்தஜீயும் அங்கு வந்திறங்கினர். நாங்கள் உடனே மூவரும் சேர்ந்து 108 முறை மகாமிருத் துஞ்ஜய மந்திரத்தை முறைப்படி உச்சரித்தோம். அவர் பிரக்ஞை அற்றுக் கிடந்தார். நாங்கள் மந்திரத்தை முறைப்படி உச்சரித்தோம். அவர் பிரக்ஞை அற்றுக் கிடந்தார். நாங்கள் மந்திர உச்சாடணம் செய்த பின் வீடு திரும்பிவிட்டோம். அவர் அன்றிரவு டாக் டர்கள் எதிர்பார்த்தது போல் இறக்கவில்லை. சுமார் ஒரு வருடகாலத்தின் பின்னர் தான் இறந்தார். இந்த மந்திரத்தை 21 முறை உச்சரித்து விட்டு நீண்ட பயணங்களில் ஈடுபட்டால் விபத்துக்களை வெற்றி கொள்ளலாம் என்பார்கள்.

மந்திரங்களின் செயற்பாட்டை அடுத்து கவனிப்போம். இந்த உலகமானது மூல சக்தி இயக்கத்தின் வெளிப்பாடே என்கிறது விஞ்ஞானம்.(Primordial Motion of Energy) அதன் அதிர்வு எல்லையற்றது என்றும் கூறுகின்றது விஞ்ஞானம்.(Its Rate of Vibration is infinite)

எமது முன்னோர்களும் இந்த பிரபஞ்சத்தில் நாம் காணும் யாவையும் அந்த பராசக்தியின் வெளிப்பாடே என்று தான் கூறினர். எனவே சக்தியானது வெவ்வேறு விதமான அதிர்வுகளின் மூலம் இந்தப் பிரபஞ்சமாகத் தென்படுகின்றது என்பதே எமது ஞானியர் முடிவு. அந்த அதிர்வுகள் எமது கண்களை வந்தடையும் போது நிறங்கள் , உருவங்கள் என்பவற்றை நாம் காண்கின்றோம். அதே அதிர்வுகள் எமது காதைத் தாக்கும் போது அவற்றை ஒலி என்கிறோம். அதேபோல்த் தான் ஸ்பரிசம், மணம் ,சுவை ஆகிய யாவுமே. அந்தந்தப் புலன்களை அதிர்வுகள் வந்தடையும் போது நாம் வெவ்வேறு விதமான அனுபவங்களை அனுபவிக்கின்றோம். எமது புலன்களில் இருக்கும் உணர்ச்சி நாளங்களை இந்த அதிர்வுகள் அடையும் போது ஏற்படும் அனுபவங்களே கேட்பு, காட்சி, மணம், சுவை, ஸ்பரிசம் ஆகியன.

எங்கும் எவையும் இந்த அதிர்வுகளின் ஒன்றாடலால் இந்த உலகை எமக்குப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே எவ்வாறு எமது சிந்திக்கும் அறிவு, சகிக்கும் புலன்கள், உணரும் உள்ளம் ஆகியன எமக்குள் அடக்கமோ அதேபோல் நாங்கள் இந்தப் பிரபஞ்சத்தினுள் அடக்கம். இந்தப் பிரபஞ்சமோ பலவித அதிர்வுகளால் ஆனவை. அந்த அதிர்வுகள் அற்றுப் போனால் இந்தப் பிரபஞ்சத்திற்கே இடமில்லை. எமது உடலுள் புலன்களாக இயங்குவதும் சக்தி. வெளி உலகில் காணப்படும் அசையும் அசையாப் பொருட்களாக இயங்குவதும் சக்தி. அந்த சக்தியும் எம்முள் இயங்கும் சக்தியும் ஒன்றோடொன்று இணையும்போது ஏற்படுவதே அனுபவம்.

ஆனால் மனிதன் இந்த அதிர்வுகளால் ஏற்படும் அனுபவங்களைத் தாண்டி எங்கும் வியாபித்திருக்கும் அந்த ஆதிமூல சக்தியுடன் இணையும் போதுதான் தெய்வீக நிலை அடைகின்றான். அப்பொழுது அவன் இயற்கைக்கு மாறான அற்புதங்களை நிகழ்த்தக் கூடியவனாகப் பரிணமிக்கின்றான். ஆனால் இப்பேற்பட்ட தெய்வீக மனிதர்கள் அற்புதங்களை நாடிச் செல்வதில்லை. அவர்கள் இருக்கும் இடத்தில் அற்புதங்கள் நிகழ்கின்றன.

திருமுறைகள் பல பாடப்பட்டபோது அங்கு அற்புதங்கள் நிகழ்ந்தன. அந்தப் பாடல்கள் மந்திர சக்தியைப் பெற்றிருந்தபடியால்தான் அவைநிகழ்ந்தன. உதாரணம் தான் முன்னர் நான் குறிப்பிட்ட 'கூற்றாயினவாறு விலக்கலீர்' என்ற பாடல். அப்பரின் குடலைப் புரட்டி எடுத்த அந்த சகிக்க முடியாத வேதனை அந்தப் பாடலை அவர் பாடியதும் போய் விட்டது. அந்தப் பாடலின் மந்திர சக்தியே அதன் அதிர்வுகளின் அற்புதமே அந்த நற்செயலைச் செய்ய வைத்தன.

சுண்ணாம்பு அறையினுள் அடைத்து வைக்கப்பட்ட அப்பர் பாடிய 'மாசில் வீணையும்' என்ற தேவாரம் அவரால் பாடப்பட்ட போது சூழலில் இருந்த வெப்பம் தணிந்து குளிர்மை யாக இருந்ததாம்.

கற்றூணைப் பூட்டி அரசனின் ஆட்கள் அப்பரைக் கடலில் தூக்கி எறிந்த போது அந்தக் கற்றூணே ஒரு தெப்பமாக அவரைக் கரைக்குக் கொண்டு வந்து தற்போதைய கடலூர் அருகில் சேர்த்தது. அவர் அதற்குச்

**ஓய்வுபெற்ற நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**

செய்தது ஒன்றே ஒன்றுதான். 'சொற்றுணை வேதியன்' என்று அவர் மனமுருகிப் பாடியதே அவருக்கு அந்தப் பேற்றைக் கொடுத்தது.

இவ்வாறு தேவார திருவாகப் பாடல்கள் எற்படுத்திய ஆச்சரியமிக்க அனுபவங்களை, அதிசயங்களைக் கூறிக்கொண்டே போகலாம். இவை எவ்வாறு நடந்தேறின என்று ஆராய்ந்தோமானால் நிறைமொழி மாந்தர் ஆணையில் எழுந்த மறைமொழிகளான அவற்றின் மந்திர சக்தியே அதற்குக் காரணமாகும் என்பது புலப்படும். இந்தத் தருணத்தில் வடமொழி மந்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்து உச்சரித்தல் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

(தொடரும்)

## தமிழ் கட்சிகளின் கூட்டு சிங்கள அரசுக்கு வேட்டு

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கிறது என கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைக்கான பரிகாரம் போன்றவற்றுக்காகப் பொது இணக்கப்பாட்டுடன் தமிழ்க் கட்சிகள் செயற்படுவதென்பது வரவேற்கத்தக்கது.

ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரைப் பயன்படுத்தி, தமிழ்பேசும் கட்சிகளினால் முன்வைக்கப்படும் அனைத்து யோசனைகளையும் பலவீனமடையச் செய்யும் தந்திரத்தையே சிங்கள அரசுகள் இதுவரை செய்து வருகின்றன.

ஆனால் இன்று அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதால் சிங்கள அரசுகளுக்கு இதுவொரு பலத்த அடியாக அமையும் என்றார். (6)


## முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு தலைவருக்கு 4 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்புப் பிரிவு தலைவரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்னவுக்கு கண்டி மேல் நீதிமன்றம் நான்கு வருட சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சுரேஷன் இத் தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணரத்ன பண்டாரவை, பொரமதுல்ல மகாவித்தியாலய மைதானத்தில் வைத்து அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(6)



யாழ் பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன், கௌவரவிருந்தனராக கலந்து கொண்ட பாலர் கல்விகழக செயலாளர் திருமதி.தெ.இரத்தினகோபால் ஆகியோர் மங்கலவிளக்கேற்றுவதையும் முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் என்.குமார்.)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:-வே. அன்பழகன்
(யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை)

## மாதிரி பரீட்சை—09
## வினாத்தாள் —II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

❖பின்வரும் பந்தியை வாசித்து 01-09 வரையான வினாக்களுக்கு விடை தருக.

> பறவைகள் தத்தம் கூடுகளை நாடித் திரும்புகின்றன. ஆ நிரையும் ஆட்டு மந்தையும் தம் தொழுவங்களை நோக்கி விரைகின்றன. காட்டு விலங்குகளாகிய அரியும் கரியும் பிறவும் கரந்துறையும் இடங்களை விட்டு வெளியே வந்து இரை தேடுகின்றன. தமக்கு ஓய்வினையும் இன்பத்தையும் தரும் இரவினை மனிதர்கள் விரும்பி வரவேற்கின்றனர். பூமாதேவி என்ற அணங்கு இருள் என்னும் ஆடையால் இறுகப் போர்த்துக்கொண்டு அமைதியாக உறங்குகின்றாள்.

01.தரப்பட்ட சம்பவம் ஒரு நாளின் எப்பொழுதில் நடைபெறும்?

02.உயர்திணைப் பெயர்ச்சொல் எது?

03.பெண் பால் வினைச்சொல் எது?

04.மனிதர்கள் இரவினை ஏன் வரவேற்கின்றார்கள்?

05.வினை அடைமொழி ஒன்று எழுதுக.

06.அ்.றிணைப் பன்மைப் பெயர் ஒன்று எழுதுக

07.அ்.றிணைப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

08.'விரைகின்றன' என்பதை எதிர்காலத்தில் எழுதுக.

09.அணங்கு என்று குறிப்பிடப்படுவது எதனை?

02. பொருத்தமான மரபுச் சொற்களை வெற்றிடங்களில் எழுதுக.

1.கலைமானும், ..........................................................மானும் குளத்திலே நீர் பருகின.

2.பல்லி சொல்லும். அது போல வண்டு..........................................

03. பின்வரும் சொற்கூட்டங்களில் இருந்து ஐந்து சொற்களுக்குக் குறையாத இரு கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | விதைத்தான் | உழவன் | மாணவன் |
| பாடம் | படித்தான் | பாடசாலையில் | கவனமாகப் |
| வயலை | நேற்று | உழுது | தானியங்களை |

04. கருத்து எழுதுக.

1. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு -...............................................

2. எடுத்தெறிதல் -..........................................................................................

05.தனிச்சொல்லை எழுதுக.

1.நூல் ஒன்றுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை

2.பாராளுமன்றத்தில் ஒருவர் முதன் முதலாக ஆற்றும் உரை

06. 'மரம் அசைந்து ஆடியது' என்பதைப் பன்மையில் எழுதுக.

07. எழுத்து வழக்கில் எழுதுக.


இளனி குடிச்சேன் -..........................................................................................

08.குறியீடு இடுக.

ஏன் இப்படி ஓடி வருகிறாய் என்று ஆசிரியர் கேட்டார்.

இப்படத்தைப் பார்த்து 5 சொற்களுக்குக்குறையாமல் இரு வாக்கியங்கள் எழுதுக.

09



1. ..........................................................................................

2...........................................................................................

10.பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1.வானவில் -..............................................................

.2. வகுப்பறை..............................................................

3.மஞ்சள் -..............................................................

11. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

**1.Please go out -..............................................**

**2.Come forward -..............................................**

**3.I like it -..............................................**

12. சிங்களச் சொல்லின் தமிழ்க்கருத்தை எழுதுக.

1.ஓயாகே வயச கீயத -..............................................


2.அம்ப றஸய் -..............................................

13.பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்கள எழுத்தை சிங்கள உச்சரிப்பில் எழுதுக.

1. காகம் கறுப்பு நிறம் -..............................................

2.தென்னை மரம் -..............................................

14. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.



இந்தக் குறியீடு குறிக்கும் கருத்து யாது?


1.முன்னால் சிறுவர் கடவை

2.சிற்றுண்டிச்சாலை

3.சிறுவர் விளையாட்டிடம்

4.மலசலகூடம்

2. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் சாய்தளத்தின் மீது இலகுவாக இழுத்துச் செல்லாமா?




3. பாடசாலையின் ஆய்வுகூடத்தில் மின்பொசியும் மின்தானத்தில் ஈர்த்துப் பிடிக் கப்பட்டு இருக்கும் ஒருவரை அதிலிருந்து விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை

1. அதிபருக்கு அறிவித்தல் 2.பிரதான ஆளியை அணைத்தல்

3.வைத்திய உதவிக்கு தயாராதல்

4.அவரை பிடித்து வெளியே இழுத்தல்

4. செம்மஞ்சள் நிறத்தைப் பெறுவதற்கு எந்த இரு நிறங்களையும் கலக்க வேண்டும்.

1.மஞ்சள்,கறுப்பு 2.மஞ்சள், சிவப்பு

3.மஞ்சள், நீலம் 4.மஞ்சள், வெள்ளை

5. புரதச் சத்து அதிகம் உள்ள உணவு?


1.மரவள்ளி 2.சோயா 3.கரட் 4. கீரை

6.மன ஒருமைப்பாட்டுச் செயற்பாடுகளை முழுமையாகச் செய்வதற்கு எத்தனை முறைகள் உண்டு

1.மூன்று 2. நான்கு 3. ஐந்து 4. ஆறு

7.கண் சிவப்பு நிறமுடைய பறவை.

1.செண்பகம் 2.மைனா 4.கிளி 4. குயில்

8. 

அருகில் உள்ள படத்தில் காணப்படுவது சூரிய நமஸ்காரத்தின் எத்தனையாவது பயிற்சி,

1.ஐந்தாவது 2.ஆறாவது

3.ஏழாவது 4.எட்டாவது

9.கொழும்புக்கு அண்மித்த இடத்தில் கடலில் விழும் நதி

1.ஜின் கங்கை 2.களுகங்கை

3.களனிகங்கை 4.மகாவலி கங்கை

10.இலங்கையிலுள்ள உயரமான நீர்வீழ்ச்சி,

1.பம்பரகந்தை 2.தியலும 3.லக்சபானா 4.அபர்டின்

11.சிறுகரடி நட்சத்திரக் கூட்டத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை

1.ஆறு 2.ஏழு 3.பத்து 4. பதினொன்று

12.கொள்ளை நோய்க் கிருமியை எங்களுக்கு கொண்டுவரும் பிராணி,

1.பூனை 2.நாய் 3.எலி 4.இலையான்

13.கீழ் காணும் பூக்களுள் மிகவும் நறுமணம் வீசும் பூ

1.செல்வந்தி 2.நித்தியகல்யாணி 3.அலரி 4.மல்லிகை


14.கீழ்காணுபவற்றில் விரைவாக முளைக்கும் விதைவர்க்கம்,

1.பூசனி 2.பாகல் 3.போஞ்சி 4.கடுகு

15.இரவு வேளையில் இலை சுருங்கும் மரவர்க்கம்,

1.அகத்தி 2.கறிவேப்பிலை 3.முருங்கை 4. சதைகரைச்சான்

16. படத்தில் 3 பற்றரிகள் கொண்டு ஒரு மின்குமிழை எரியச் செய்வதற்குரிய 4 முறைகள் காட்டப்பட்டுள்ளன. இதில் சரியான முறையில் காட்டப்பட்ட உருவத்தைத் தெரிவு செய்க.




15.கணித்து விடைகளை எழுதுக.

1.1246 ஐ எழுத்தில் எழுதுக.

2.8632 எண்ணில் உள்ள இலக்கம் 6 இன் பெறுமதி என்ன?

3. | 3 | 0 | 6 | 9 | தரப்பட்டுள்ள எண் அட்டையைப் பயன்படுத்தி எழுதக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

(.............................................................)

4. 15 உடன் ஒன்றைக் கூட்டி வரும் எண்ணை உரோம எண்ணில் எழுதுக. (.............................................................)

5. 7424 உடன் 2347 ஐக் கூட்டுக.


(.............................................................)

6. 948 இலிருந்து 316 ஐக் கழித்து வரும் வித்தியாசம் என்ன?

(.............................................................)

7. 87 ரூபா 50 சதத்திற்கு பொருட்களை விலைக்கு வாங்கி விட்டு வியாபாரிக்கு ரூபா 100 ஐக் கொடுத்தால் மிகுதியாகக் கிடைக்கும் பணம் யாது?


(..........................ரூபா....................சதம்)

8. 


தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?

(.....................................................)

9. அருகிலுள்ள கடிகாரமுகம் காட்டும் நேரத்தின் கோணம் யாது?




(.............................................................)

10. 450 மீல்லி லீற்றர் பால் உள்ள பாத்திரத்தில் மேலும் எவ்வளவு பால் சேர்த்தால் ஒரு லீற்றர் பால் பெறலாம்?

(.............................................................)ml

11. பெருக்கல் ' * ' குறியீட்டினாலும் வகுத்தால் / குறியீட்டினாலும் காட்டப்படும் எனின் 9*4 / 2 இன் பெறுமானம் யாது?

(.............................................................)


12. 

இந்த உருவிலுள்ள சிறிய சதுரங்கள் ஒவ்வொன்றும் 1 சென்றி மீற்றர் நீளமுடையது. எனில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?

(.............................................................)

13 பி.ப. 12.30 இற்குப் புகையிரத நிலையத்திற்கு வந்தடைய இருந்த புகையிரதம் 45 நிமிடம் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது.அவ்வாறு எனில் இப் புகையிரதம் வந்தடையும் நேரம் யாது.

(.............................................................)

14. 


வரிப்படத்தில் காணப்படும் பென்சிலின் நீளம் யாது,

(.............................................................)

16.நான்கு ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காணப்படுகிறது.

| பாடசாலை | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| விஜய வித்தியாலயம் | 106 | 95 |
| அந்தோனியார் வித்தியாலயம் | 104 | 85 |
| சாகிரா வித்தியாலயம் | 108 | 105 |
| நாவலர் வித்தியாலயம் | 126 | 120 |

1. விஜய வித்தியாலய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(...........................................)

2.அந்தோனியார் வித்தியாலயத்தின் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? (...................................................)

3.சாகிரா வித்தியாலயத்தின் எல்லா ஆண் பிள்ளைகளும் நான்கு இல்லங்களுக்குச் சமனாகப் பங்கிடப்பட்டால், ஓர் இல்லத்திற்குரிய ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

4.நாவலர் வித்தியாலயத்தின் ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 பென்சில்கள் இலவசமாக வழங்கப்பட்டன. ஆண் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பென்சில்களின் எண்ணிக்கை யாது? (...................................................)

5. நான்கு பாடசாலைகளிலுமுள்ள பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?. (.......................................)

17. பாலன் ஒருநாள் பொழுதுபோக்கிற்காக மீன் பிடித்து விளையாடுவதற்காகத் தூண்டிலுடன் குளத்திற்குச் சென்றான். இதன் பிறகு நடந்திருக்கும சம்பவங்களைப் பின்வரும் படச்சட்டங்களைப் பயன்படுத்தி ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம் பெறவேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் , பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.



..............................................................................................

..............................................................................................

..............................................................................................

# மாணவர் கல்வி மேம்பட 3

## ஆசிரியர்,பெற்றோர், மாணவரிடையே ஒத்துணர்வு

பெற்றோர்கள் குழந்தைகளைத் தனித்துச் செயற்பட விடுதல் வேண்டும்.அவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கலாம். தங்கள் விருப்பு வெறுப்புக்களை குழந்தைகள் மீது திணித்தல் கூடாது. பெற்றோர்கள் நல்ல ஆலோசகர்களாக இருத்தல் வேண்டும். பெற்றோர்கள், குழந்தைகளை ஆணை இடுபவர்களாக இருக்காமல் அன்புடன் அவர்களை வழிநடத்தி வாழ்க்கைப் பாடத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் போது பெற்றோர், பிள்ளைகள் உறவு மேம்படும்.

நற்சூழலை உருவாக்கிக் கொடுத்தல், தம் குழந்தைகள் மீது நம்பிக்கை வைத்தல், பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல், குடும்பப் பிரச்சினைகளை அவர்களுடன் பேசுதல், குழந்தைகளை மற்றக் குழந்தைகளோடு ஒப்பிடாது இருத்தல். இவை எல்லாம் பெற்றோர்களின் பாரிய பொறுப்புகளாகும்.

''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே''எனும் புறநானூறும்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்''

என்ற திருக்குறள் கூறும் கருத்துக்களும் சிந்திப்பதற்கு உரியன.

குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கி, அவர்களுடன் மகிழ்வோடு உரையாடி, அவர்கள் பிரச்சினைகளைப் பொறுமையோடு கேட்டு அவர்களுக்கு உதவி பாராட்ட வேண்டிய வேளைகளில் பாராட்டி அவர்கள் ஆற்றலை வளர்க்க வேண்டும் .சுருங்கக் கூறின்,

1.குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்துக் கண்காணித்தல்.
2.குழந்தைகளுக்குச் செய்தவற்றைச் சொல்லிக் காட்டாமை.
3.குழந்தைகளுக்கு ஆலோசகர்களாக ஆகுதல்.
4.மற்றவர்களோடு ஒப்பிட்டுக் குறை கூறாமை.
5.தவறுகளைப் பெரிது படுத்தாது அன்போடு வழிநடத்தல்
6.தாய், தந்தையர்கள் தம் மன வேற்றுமைகளைக் குழந்தைகள் முன் காட்டாது ஒழுகுதல்.
7. அன்பு, பாசத்துடன் குழந்தைகளை அரவணைத்து வளர்த்தல்.

போன்ற செயல்கள் பெற்றோர் பிள்ளைகள் உறவு மேம்பட ஆக்கமானதாக அமையும்.

இனி சமுதாயக் கூட்டுக் கல்வியானது ஒரு சமுதாயத் தொடர்புடைய கல்வி முறையை வழிப்படுத்தப்படுகின்றது. இம் முறை மக்கள் ஒருவரிலிருந்து மற்றொருவர் தம் சொந்த முயற்சியாலேயே கற்றுக் கொள்வர் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. அறிவு சார்ந்த கல்வி முறைக்கும் அனுபவம் சார்ந்த கல்வி முறைக்கும் இடையே ஒரு பாலம் போல் சமுதாயக் கல்வி முறை அமைகிறது.

நாம் அடிப்படையில் அடுத்தவருடைய பழக்கவழக்கங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.சிறிய குழந்தை தன்னுடைய மூத்த சகோதரனையோ ,சகோதரியையோ பார்த்துக் கற்றுக் கொள்கிறது. இதைப் போல வாழும் சூழ்நிலையும் நமது பழக்கத்தை மாற்ற எத்தணிக்கிறது. உதாரணமாக புதிதாக சேர்ந்த மாணவன் தன் உடை அணியும் பழக்கத்தை மற்றவர்களைப் போல் மாற்றிக்கொண்டு அந்தக் குழுவில் இடம்பிடிப்பது.

நவீன சமுதாயக் கல்வி முறையில் ஊக்கப்படுத்துதல் அல்லது தண்டனை விதித்தல் ஆகிய இரண்டும் கற்றலில் மறை முகமாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாகவே அவன் தன் பழக்கங்களைக மாற்றிக்கொள்கிறான். ஊக்கம் ஒருவனின் அறிவு சார்ந்து கற்கும் ஆற்றலை தூண்டுகிறது. அத்தூண்டுதல் அவன் கற்பதற்கும் அதன் அடிப்படையில் தன் பழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் வகை செய்கின்றது.

சமுதாயக் கல்வி என்பது, பழக்கங்களின் தன்மை, அறிவு சார்ந்த சில எண்ணங்கள் இவை இரண்டையும் பிரதிபலிக்கின்றது. செயல்படுத்தாமல் கற்றல் (Learning without performance) எல்லாநேரத்திலும் நல்ல விளைவைத் தருவதில்லை. இனி, கவனித்தல் கற்றலின் முதல் தேவை இன்றியமையாததும் கூட . ஒரு புதிய விடயத்தைக் கற்கும்போது கூர்ந்து ஒருமுகப்படுத்திய கவனம்வேண்டும்.

மீண்டும் ஒரு பழக்கத்தில் மாற்றம் வலியுறுத்தப்படும் போது மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகிறது.இதனால் அவர்கள் மனதில் ஒரு வித எதிர்பார்ப்பு அதிகமாகிறது. இதனால் அவர்கள் மனதில் ஒரு வித எதிர்பார்ப்புக்களைப் பட்டியல் இடுகிறார்கள். சில பழக்கங்கள் நல்லதையும், சில தீயதையும் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். கற்றுக்கொள்கிறவர் எந்தப் பழக்கம், பாராட்டையும், எந்தப் பழக்கம், தண்டனையையும் கொண்டுவரும் என்பதனையும் அவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாட்டையும் தெரிந்துகொள்ளல் அவசியம்.

**விளைவுகளின் விகிதம்** (Reciprocal Causation)ஒரு பழக்கத்தில் வரும் மாற்றம் சுற்றுப்புறச் சூழ்நிலையையும்,மனிதனையும் ஒரே சமயத்தில் பாதிக்கக்கூடும். உண்மையில் மனிதன், அவனுடைய பழக்கம், சுற்றுப்புறம் ஆகிய மூன்றும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன.உதாரணமாக புகைப்பிடிப்பதை ஒரு மனிதன் குறைத்துக்கொண்டால் மாசினைக் குறைத்து மேலும் மனிதனது நலத்தை இன்றும் அதிகமாகப் பேணுகிறது.

**முன்மாதிரிகள்** (Model) பல வகை முன்மாதிரிகள் உண்டு. உதாரணமாக வாழும் ஒரு மனிதனோ இறந்த ஒருவரோ முன்மாதிரியாக தன் பழக்கங்களை வலியுறுத்தலாம்.தந்தை சொல் கேட்டு கானகம் சென்ற ஸ்ரீ இராமபிரானைப் போல இருக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்கு ஸ்ரீ இராமனை உதாரணம் காட்டுவது போல் ஒரு காவிய நாயகன் கூட முன் மாதிரியாகலாம். குழந்தைகளுக்கு உயர் வெற்றி பெற்ற சாதனையாளர்கள், Henry Ford, Thomas Alva Edison, Isac Newtan. Wrigh Brothers போன்ற வெற்றிபெற்ற சாதனையாளர்கள், கம்பர், இளங்கோ அடிகள், திருவள்ளுவர், ஒளவையார் போன்ற தீர்க்கதரிசிகள், Dr.இராதாகிருஷ்ணன், Dr.மஹாதேவன், Dr அப்துல்கலாம், மகாத்மாகாந்தி, பண்டிதர் நேரு, பாவலர் துரையப்பாபிள்ளை போன்ற எங்கள் காலத்திலே வாழ்ந்த, வாழ்கின்ற சான்றோர்களின் வரலாறுகள் எல்லாம் முன்மாதிரியாக்கப்படல் வேண்டும்.

இன்னொரு வகை, குறிப்புகளால் முன்மாதிரி காட்டுவது (Symbolic). உதாரணமாக தொலைக்காட்சியில் ஒரு நல்ல உபயோகமான பொருளை விளக்கி, அதைப் பயன்படுத்தினால் வளர்ச்சி அடையலாம் என்று குறிப்பிடுவது போலாகும். இதைவிட மனதிற்கு உகந்த ஒருவர் ஒன்றைச் சொல்லும் போது இன்னும் ஈடுபாடு வரும். நல்ல காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உணவில் சேர்ப்பது, விற்றமின்களை (Vitamins) புரதங்களை சேர்ப்பது போன்றவற்றை அத்துறைசார் வல்லுநர்கள் எடுத்துச் சொல்லும் போது அதிக நம்பிக்கை ஏற்படும். (தொடரும்)

வைத்திய நிபுணர்
த.பேரானந்தராசா MBBS,MD(Medicine)
யாழ்.போதனா வைத்தியசாலை

# பாப்பரசரிடம் அரசியல் கைதிகள் தமது விடுதலை கோரி மன்றாட்டம்

(கொழும்பு)

இலங்கைச் சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் விடுதலைக்கு ஆவன செய்யவேண்டும் எனக் கோரி புனித பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

இவர்கள் இக் கடிதத்தில் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கையிலுள்ள அனைத்து சிறைகளிலும் நீண்டகாலமாக பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளான எங்களின் பொதுமன்னிப்பு அல்லது பிணையில் விடுதலை தொடர்பாக இலங்கை ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்யுங்கள்.

நாம் பல வருடங்களாக எமது உறவுகளைப் பிரிந்து சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகிறோம். சிறைக் கூண்டினுள் சுதந்திரமற்ற பறவைகள் போல் எப்போது விடுதலை கிடைக்கும் என கண்ணீருடன் தவித்து நிற்கிறோம்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப் பட்டுள்ளோம். இதில் தாய்மார்கள், அங்கவீனர்கள், முதியவர்கள்,இளைஞர்கள், யுவதிகள் எனப் பல தரப்பட்டோர் தடுத்து வைக்கப் பட்டுள்ளோம்.

அனைத்து மக்களும் எமது நாட்டில் சம ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்பதே எமது மேலான விருப்பம். கடந்த காலங்களில் ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல கடிதங்களை அனுப்பி எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியும் இதுவரை பதிலேதும் கிடைக்கவில்லை.

நாங்கள் அனைவரும் உங்கள் மீதும் உங்கள் திருச்சபைமீதும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம்.கடந்த காலங்களில் எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து பலதரப்பட்ட உதவிகளை செய்துள்ளீர்கள்.

இம் முறையும் நீங்கள் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து எமது பொது மன்னிப்பு மற்றும் பிணை வழங்கல் தொடர்பாக நற்செய்தியை பெற்றுத்தருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், குருனாகல், நீர்கொழும்பு,அனுராதபுரம், காலி, கண்டி, பதுளை ஆகிய மறை மாவட்ட அதிபர்களுக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளது. (ச-5)

## த.தே.வி.கூ. அரசியல் கட்சியாக பதிவு


தமிழ் தேசிய விடுதலைக்கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்குரிய ஆவணங்களை தேர்தல் ஆணையாளரிடம் இன்று கையளிக்கவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக்கட்சியின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பிணர் என்.ஸ்ரீகாந்தாவும் செயலாளராக எம்.கே.சிவாஜிலிங்கமும் செயற்படவுள்ளனர் என்பது குறப்பிடத்தக்கது. (6)

## பதில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராக சரத் அமுனுகம

பிரதிநிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பதில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

நேற்றுமுன்தினம் காலை அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் மேற்படி பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு உக்ரேன் செல்வதால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (6)



தேசிய கல்வி நிறுவகத்தினால் வர்த்தகமும் வணிகவியலும் பாடம் கற்பிக்கும் யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வர்த்தகமும் வணிகவியலும் பாட செயற்றிட்ட அதிகாரி எஸ்.பிரபாகரன்,வர்த்தகமும் வணிகவியலும் பாட ஆசிரிய ஆலோசகர் மு.சகுந்தலாதேவி உரையாற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் ஆசிரியர் ஒருவருக்கு வழிகாட்டல் நூலை வழங்குவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

23.1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப்பேரவை,
A சட்டவாக்க நிறைவேற்று நீதி ஆகிய முத்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தது.
B ஓரங்க மன்றமாகக் காணப்பட்டது.
C அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் மன்றமாக விளங்கியது.
D இறைமை பொருந்தியதாக இருக்கவில்லை ஏனெனில் அரசியலமைப்பு நீதிமன்றம் காணப்பட்டமை.
1. ABD 2. BCD 3. ABC 4. ACD

24.1972 யாப்பின் கீழ் சனாதிபதி,
A அரசாங்கத்தின் தலைவர்
B அரசின் தலைவர்
C பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார்.
D பிரதமரால் தேசிய அரசுப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து சாதாரண பெரும்பான்மையுடன் பதவிநீக்கலாம்.
1. ABC 2. BCD 3. ACD 4. ABD

25.1978 யாப்பின் கீழ் நிறைவேற்று ஜனாதிபதி,
A அரசியல் யாப்பை மீறும்போது குற்றப்பிரேரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்.
B வழக்குத் தொடர்வதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார்.
C ஆறு வருடப் பதவிக்காலத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்படுகின்றார்.
D எத்தனை தவணைகளுக்கும் பதவிவகிக்க முடியும்.
1. DAB 2. BCD 3. ACD 4. ABC

26.1978 யாப்பின் கீழ் அமைச்சரவை,
A மந்திரிசபைக்கு புறம்பான அமைச்சர்களை நியமிக்க முடியும்.
B ஜனாதிபதி மந்திரிசபை கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார்.
C ஜனாதிபதி தான் விரும்பிய துறைகளை தன்வசம் வைத்திருக்க முடியும்.
D அமைச்சரவையின் உறுப்பினர் எண்ணிக்கை யாப்புரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளது.
1. ABC 2. BCD 3. ACD 4. ABD

27.1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றம்,
A 225 உறுப்பினர்களைக் கொண்டது.
B பாராளுமன்றின் இறைமை என்ற கோட்பாட்டின் கீழ் தாபிக்கப்பட்டது.
C 196 உறுப்பினர்கள் சர்வசனவாக்குரிமையின் மூலம் மக்களாலும் 29 பேர் தேசியப்பட்டியல் மூலமும் தெரிவுசெய்யப்படுவர்.
D பாராளுமன்றின் ஆயுளை 6 வருடங்களுக்கு மேல் நீடிக்க வேண்டுமாயின் பாராளுமன்றில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு மக்கள் தீர்ப்பின் மூலம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
1. BCD 2. ABC 3. ABD 4. ACD

28.ஓம்பூட்ஸ்மன்,-
A பாராளுமன்றத்துக்கெதிரான மனுக்களை விசாரிக்க முடியாது.
B அரசாங்க அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளிலிருந்து பிரசைகளைப் பாதுகாக்கின்றார்.
C ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படுகின்றார்.
D பொலிஸ் மாஅதிபர் இராணுவத் தளபதி சட்டமா அதிபர் கணக்காளர் நாயகம் என்போருக்கெதிரான மனுக்களை விசாரணை செய்யும் அதிகாரம் கொண்டுள்ளார்.
1. ABC 2. BCD 3. ABD 4. ACD

29.1978 யாப்பின் கீழ் உயர் நீதிமன்றம்,
A பிரதம நீதியரசர் உட்பட 11 நீதிபதிகளைக் கொண்டது.
B ஏதேனும் உறுப்பினர் வெற்றிடம் ஏற்பட்டால் செயற்பட முடியாது.
C மேலானதும் இறுதியானதுமான உச்சநிலை நீதிமன்றமாகும்.
D ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றது.
1. ACD 2. ABC 3. BCD 4.BAD

30.மாகாண முதலமைச்சர்,
A மாகாண அமைச்சர் சபைக்கு தலைமை தாங்குகின்றார்.
B மாகாண அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் கடமைகளை தீர்மானிப்பார்.
C முதலமைச்சரின் ஆலோசனைப்படியே ஆளுனர் மாகாணசபை அங்கத்தவர்களில் இருந்து ஏனைய அமைச்சர்களை நியமிப்பார்.
D மாகாண முதலமைச்சர் மாகாணசபையின் அமைச்சர்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பார்.
1. DBC 2. ABD 3. ABC 4.ACD

**31-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் இருெ கூற்றுக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவுக்குரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட் டியில் உள்ள 1 2 3 அல்லது 4 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகின் றது. என்பதைத் தெரிவுசெய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |

| கூற்று I | கூற்று II |
|---|---|
| 31.இலங்கையில் பல கட்சி முறை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் சமூகப்பல்லினத்தன்மை சமப்படுத்தப்படாத வகுப்பு முரண்பாடு நிலவுவதல் , கோட்பாட்டு ரீதியான முரண்பாடுகள்,விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைபோன்றனவாகும். | 1956 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றியானது இருபிரதான அரசியல் கட்சிகள் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தது. |
| 32.அரசியல்பாப்பின் 17ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் நோக்கங்களில் ஒன்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த உயர்பதவிக்கான நியமனத்தில் ***தற்துணிவு அதிகாரத்தை*** சமன்செய்து கட்டுப்படுத்துவதாகும். | பிரதமர்,சபாநாயகர்,எதிர்க்கட்சித்தலைவர் என்போர் இதன் உறுப்பினர்களுள் உள்ளடக்கப்படுவர். இதன் தலைவர் பிரதமராவார். |
| 33.1978 யாப்பின் கீழ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் நான்கு ஆண்டு காலப் பதவிக்குப் பின்னர் மேலும் ஒரு தவணைக் காலத்திற்கு பதவி வகிக்கக்கூடிய வகையில் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யலாம். | பதவிவகித்தவரே மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் அவரின் பதவிக்கலாம் முன்னைய பதவிக்காலத்தின் முடிவில் இருந்தே புதிய பதவிக்காலம் ஆரம்ப மாகும். |
| 34.மத்திய அரசின் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பரவாக்கும் நோக்கில் அரசியல் யாப்புக்கான 13ஆம் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. | மாகாண ஆளுனர் அம்மாகாண சபையில் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம். |
| 35. 1972 யாப்பின் கீழ் இறுதிமேன்முறையீட்டு நீதிமன்றமாக பிறிவுக்கவுன்சில் தொடர்ந்தும் இருப்பதற்கு வழி செய்தது. | 1972 யாப்பு அடிப்படை உரிமைகள் பற்றி ஒரு அத்தியாயத்தை அறிமுகம் செய்தது. |
| 36. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பாதுகாப்புச் சபையின் விதந் துரைக்கமைய பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவார். | அண்மைக்காலங்களில் பொதுச் செயலாளர் பதவி ஒவ்வொரு கண்டங்களைச சேர்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஆசிய நாட்டவருக்கு வழங்கப்பட்டது. |
| 37. பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளாக இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பே பொதுநலவாயமாகும். | பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் யாவும் பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கின்றன. |
| 38. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற நிரந்தர அங்கத்தவ நாடுகள் ஐந்தும் உட்பட 9 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். | பாதுகாப்பு சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் பிரித்தானியா,பிரான்ஸ்,ரஷ்யா, ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா என்பனவாகும். |
| 39. 1985 ஆம் ஆண்டு சார்க் அமைப்பு வங்காள தேசத்தின் தலைநகர் டாக்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. | சார்க் சாசனத்தின்படி சச்சரவு சார்ந்த மற்றும் இரு தரப்புப் பிரச்சினைகளை அதன் கூட்டங்களில் கலந்துரையாட முடியும். |
| 40. சுதந்திரத்தினை அடுத்த எட்டாண்டு காலப் பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மேலைத்தேச நாடுகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டதாக அமையவில்லை. | 1994இல் பதவிக்கு வந்த பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கையின் அயல் நாடுகளுடனான தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கும், சார்க்கின் ஊடாக கூடியளவு பிராந்திய ஒத்துழைப்பினை ஏற்படுத்தவும் முக்கியத்துவும் வழங்கியது. |

# அரசியல் மூலத்துவங்கள் II-II

## 02. மணித்தியாலங்கள்

***நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.***

**ஒவ்வொரு விடைக்கும் ஆகக்கூடியது 15 புள்ளிகள் வழங்கப்படும்.**

01.தேசிய இயக்கத்தில் ஏற்பட்ட தாக்கம் பற்றிக் கவனம் செலுத்திப் பின்வருவன வற்றை ஆராய்க.
1 .இலங்கைத் தேசிய காங்கிரஸ் தாபிக்கப்படல்
2. 921 இல் இலங்கை தேசிய காங்கிரசில் ஏற்பட்டபிளவு.
3. இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்.

02. 1. டொனமூர் குழுவினர் சர்வசன வாக்குரிமையினை சிபார்சு செய்வதற்கு முன்வைத்த காரணங்களை குறிப்பிடுக.
2. இலங்கையின் உயர்ந்தோர் குழாமினர் சர்வசன வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்பதற்கு முன்வைத்த காரணங்களைக் குறிப்பிடுக.
3.சர்வசன வாக்குரிமை இலங்கையின் பின் வந்த அரசியலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது?

03.சோல்பரி யாப்பின் கீழ் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
1. நீதிச்சேவை ஆணைக்குழு
2.மகாதேசாதிபதி
3. பாராளுமன்றம்

04.1972 யாப்பின் கீழ் பின்வருவனவற்றை ஆராய்க.
1. தேசிய அரசுப் பேரவையின் மீயுயர்தன்மை
2. நாமநிர்வாகி
3. அரசியலமைப்பு நீதிமன்றத்தின் அமைப்பும் அதிகாரங்களும்.

05.இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் பின்வருவனவற்றை பரிசீலிக்குக.
1.நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக முறையினை அறிமுகம் செய்வதற்கான காரணங்கள்.
2. ஜனாதிபதியின் நிறைவேற்றுத்துறை சார்ந்த அதிகாரங்கள்.
3. நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள்.

06. 1978 யாப்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட விகிதசமப் பிரதிநிதித்துவமுறையோடு தொடர்புபடுத்தி பின்வரும் கூற்றுக்களைப் பரிசீலிக்குக.
1. அது சிறுபான்மைக் கட்சிகளைப் பலப்படுத்தியது.
2. அது உறுதியற்ற அரசாங்கங்களை உருவாக்குகின்றது.
3.அது வாக்காளர்களைப் பிரதிநிதிகளில் இருந்து தூரப்படுத்துவதுடன் ஒரே கட்சி வேட்பாளர்களுக்கிடையில் மோதலுக்கு வழிவகுக்கின்றது.

07 .பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று பற்றி சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1.அரசியலமைப்பு பேரவை.
2.இரண்டாம் குடியரசு யாப்பின் அடிப்படை உரிமை.
3.ஐக்கிய நாடுகள் தாபனமும் உலக சமாதானமும்.
4.பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய சங்கம்.
5.பொதுநலவாய நாடுகளின் அமைப்பு.

# வலுவிழந்தோருக்கு மாற்றுவலு அளிப்பதில் முன்னின்று செயற்படும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்



வலுவிழந்தோர்க்கு மாற்றுவலு அளிப்பதில் சிறப்புடன் செயல்பட்டுவரும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் தனது புனர்வாழ்வுப் பணியின் 23 வருட நிறைவை இன்று நினைவு கூருகின்றது.

இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் சவாய் மருத்துவமனையைச் சேர்ந்த, புகழ்பூத்த அறுவைச்சிகிச்சை வைத்தியநிபுணர் பேராசிரியர் பிரமொட்கரன் சேத்தி உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கக் கூடியதும், உறுதிவாய்ந்ததும்,3ஆம் உலக நாடுகளில் பயன்தரக்கூடியதுமான ஜெய்ப் பூர் பாதத்தினை வடிவமைத்தார். இப்பாதம் இயற்கைப் பாதத்தை ஒத்ததாகவும் அதற்கு ஒத்த பதிலுபயோகம் கொண்டதாகவும் இருந்ததால் என்பு மருத்துவ உலகில் பிரபல்யம் பெற்றது.இத்திட்டம்1985 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கொழும்பு நட்புறவுச் சங்கத்தினால அறிமுகப்படுத்தப் பட்டது.

**யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தோற்றம்**

உள்நாட்டு யுத்தத்தினாலும், நோய் போன்ற ஏனைய பல்வேறு காரணிகளாலும் அங்கவீனர்களாயும் வலுவிழந்தும் செய்வதறியாது வீடுகளில் முடங்கி இருப்போரை மாற்றுவலு உடையோராக சமூத்தில் நடமாட வைக்கவும், இவர்களுக்கு கல்வி அறிவு வழங்கல், இவர்களை சமூகத்துடன் ஒன்றிணைத்தல், நிலையான வேலைவாய்ப்பினைப் பெறும் நிலைக்கு இவர்களை உருவாக்கல் போன்ற பல்வேறு திட்டங்களோடு யாழ். அன்னையர் முன்னணியின் அயராத முயற்சியால் கொழும்புநட்புறவுச் சங்கத்தின் யாழ்.கிளையாக 1987 ஆம்ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இன்று ஓர் சுயேட்சை தன்னார்வ சமூக சேவை நிறுவனமாக வலுவிழந்தோர்க்கு சேவை ஆற்றுவதில் முன்னணியில் நிற் கின்றது இந்நிறுவனம்.

ஜெய்ப்பூர் தொழில்நுட்பம் எனப்படும் அலுமினிய செயற்கை அவயவம் தயாரித்து வலுவிழந்தோருக்கு பொருந்தும் பணியில் ஆரம்பகால செயற்பாடுகள் அமைந்தன. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு முதல் 10 வருடங்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. நாட்டில் நிலவிய போர்ச் சூழலால் போக்குவரத்து சீரின்மை காரணமாக, மூலப் பொருட்கள் பெறுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

முக்கிய பிரச்சினை நிதிப் பற்றாக்குறையாக இருந்தது. எனினும், பல இடர்கள் மத்தியிலும் நிறுவனத்தின் முகாமைத்துவப் குழுவினரின் அர்ப்பணிப்புடன் கூடிய தளராத முயற்சியாலும், இரக்க சிந்தை கொண்ட கொடை யாளிகளின் உதவியாலும் நிறுவன ஊழி யர்களின் தன்னலம் கருதாத பணியாலும் சோர்ந்து போகாமல் வலுவிழந்தவர்களுக்கு சிறப்பான சேவையை ஆற்ற முடிந்தது.

**நிறுவன செயற்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி**

வலுவிழந்தவர்களுக்கு எமது நிறுவனம் ஆற்றிவந்த மனிதாபிமான பணியினைக் கவனித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை எமது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு நிதியுதவியளிக்க 1999 ஆம் ஆண்டு முன்வந்தது.இன்று நிதியுதவியுடன் பல விடயங்களில் ஆலோசனைகள் வழங்கி நிறுவன செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது.

எமது நிறுவனம் இன்று பல்துறை வளர்ச்சியுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிபெற்ற ஊழியர்களின் உழைப்பினால் ஆல்போல் வளர்ந்து வலுவிழந்தவர்களை அன்புக்கரம் கொண்டு அரவணைத்து பின்வரும் பணிகளை அவர்களுக்கு ஆற்றி வருகின்றது.

**◆ செயற்கை அவயவம் பொருத்தும் பகுதி**

ஆரம்பகாலத்தில் அவழியம் இழந்தோருக்கு அலுமினியத்திலான அவயவம் பொருத்தப்பட்டு வந்தது. 1999 இல் ஐ.சி. ஆர்.சி. நிறுவனத்தின் நிதியுதவி மூலம் நவீன தொழில்நுட்பத்தால் பொலிபுறொபைலின் (polypropylene) எனப்படும் பிளாஸ்ரிக் மூலப்பொருளால் தயாரிக்கப்படும் தரமான செயற்கைக் கால்கள், கரங்களை இயற்கையான உடலியலுக்கேற் பதயாரித்து பொருத்தி வருகின்றது. ஆரம்பத்தில் இருந்து இன்று வரை இரு தொழில்நுட்பத்திலும் 4877 செயற்கை அவயவங்கள் எம்மால் பொருத்தப்பட்டுள்ளது.

**◆ குறைபாட்டு நிவர்த்திஉறுப்பு பொருத்தும் பகுதி**

போலியோ, பிறப்புவாசி, விபத்துபோன்ற காரணிகளால் அவயவம் பாதிப்புற்றோருக்கு குறைபாட்டு நிவர்த்தி உறுப்புக்களை, (ORTHOSES) சிறந்த முறையில் தயாரித்து , பொருத்துதலானது, அவர்களின் நடமாட்டத்திற்கு உதவுவதோடு மேற்குறிப்பிட்ட குறைபாடுகளால் ஏற்பட்ட உடல் தாக்கத்தை அதிகரிக்கா வண்ணம் தடுக்கின்றது. இவற்றில் கழுத்துப்பட்டிகள், முள்ளந்தண்டு ஆதார உறுப்பு, கை கால்களுக்கான சிலும்புகள் (Splints) விசேட காலணிகள் என்பன அடங்கும். ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை 1431 குறைபாட்டு நிவர்த்தி உறுப்புக்கள் எம்மால் பொருத்தப்பட்டுள்ளன.

**◆ நடமாடும் உபகரணம் தயாரிக்கும் பகுதி**

மாற்று வலுவுடையோருக்கான நடமாடும் உபகரணங்களை புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி அவரவர் நோய்த் தன்மைக்கேற்ப சரியான அளவில் தயாரித்து வழங்குதலில் ஊன்று கோல்கள், சாதாரண விசேட சக்கரநாற்காலிகள் மற்றும் எமது முகாமையாளரால் புதிதாக வடிவமைக்கப்பட்ட பற்றரியினால் இயங்கும் முச்சகக்கர வண்டிகள், பல்வேறு விதமான நடை தாங்கிகள், நடை உதவி கருவிகள் என்பன குறிப்பிடத்ததக்கவையாகும்.ஆரம்பத்தில்இருந்து இன்று வரை 3155 நடமாடும்உபரகணங்கள் எம்மால் வழங்கப்பட்டுள்ளன.

**◆ இயன் மருத்துவப் பகுதி**

அவயவம் இழந்தோர் மற்றும் ஏனைய மாற்று வலுவுடையோர்க்கு இன்றியமையாத இயன் மருத்துவசேவை இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றது.இதுஉடல்ரீதியானதாக்கத்தில் இருந்து விடுபட்டு மீள் நிலைக்குத் திரும்ப கைகொடுத்து நிற்கின்றது.

**◆ விசேட வைத்திய ஆலோசனை**

யாழ்.போதனாவைத்தியசாலையைச் சேர்ந்த என்புமுறிவு, நெரிவு சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கே.உமாபதி அவர்கள் மாதம் ஒருமுறை எமது நிறுவனத்திற்கு வருகை தந்து மாற்றுவலுவுடையோரைப் பார்வையிட்டு வைத்திய ஆலோசனைகளை இலவசமாக வழங்கி வருகின்றார். அத்துடன் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோர் அதனைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டி நிற்கின்றார்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வேறுசில சத்திர சிகிச்சை நிபுணர்களும் தமது வைத்திய ஆலோசனைகள் தேவைப்படும் எமது மாற்று வலுவுடையோர்க்கும் வழங்கி வருவதை நாம் நன்றியுடன் இங்கு குறிப்பிடுகின்றோம்.

**◆ வைத்தியசாலைத் தரிசிப்பு**

எமது புனர்வாழ்வுப் பணியாளர் வாரம் தோறும் அவயவம் இழந்தோரை யாழ்.போதனா வைத்திய சாலையில் சென்று பார்வையிட்டு, அவயவம் பொருத்துதல், அதற்கான முன் பராமரிப்பு ஆலோசனை, இயன்மருத் துவ சிகிச்சை போன்ற சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது அவயவம் இழந்தோருக்கு காலந் தாழ்த்தாது அவயவங்களைப் பொருத்த உதவுகின்றது.

**◆ மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு**

அவயவம் பொருத்தி கல்வியைத் தொடரும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக, மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு மானி யம் எம்மால் வழங்கப்படுகிறது.

**◆ சுயதொழில் வாய்ப்புத்திட்டம்**

அவயவம் பொருத்தி உடல் ரீதியாக புனர்வாழ்வு அடைந்தவர்கள் தமது பொருளாதார நிலையை மேம்படுத்த சுழற்சி முறையிலான கடனுதவி வழங்கப்படுகின்றது.

**1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 2010 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் வழங்கப்பட்ட சேவைகளின் புள்ளிவிபரத் தகவல்கள்**

| | |
|---|---|
| செயற்கை அவயவம் பொருத்தும் பகுதி (Limb section) | |
| பொருத்திய அவயவங்கள் கால்கள் | 4667 |
| கைகள் | 0210 |
| உற்பத்தி செய்யப்பட்ட பாதங்கள் | 2823 |
| உற்பத்தி செய்யப்பட்ட பட்டிகள் | 8513 |
| செய்யப்பட்ட திருத்த வேலைகள் | 12028 |
| குறைபாட்டு நிவர்த்தி உறுப்புப் பகுதி (Orthortic Section) | |
| பொருத்தப்பட்ட சார்புறுப்புகள் | 1431 |
| நடமாடும் உபகரணப் பகுதி (Mobility Section) | |
| வழங்கப்பட்ட முச்சக்கரவண்டிகள் | 0526 |
| வழங்கப்பட்ட சக்கரநாற்காலிகள் | 0307 |
| வழங்கப்பட்ட கை ஊன்றுகோல்கள் | 0736 |
| வழங்கப்பட்ட முழங்கை ஊன்றுகோல்கள் | 2223 |
| வழங்கப்பட்ட நடைதாங்கிகள் | 0363 |
| இயன் மருத்துவப் பகுதி (Physiotheraphy section) | |
| சிகிச்சையளித்த நோயாளர்களின் எண்ணிக்கை | 18584 |
| நோயாளர்களின் வருகை | 22082 |
| புனர்வாழ்வுச் சேவைகள் (Other Rehabililtation Services) | |
| சுயதொழில் ஊக்குவிப்பு வட்டியில்லாக் கடன்பெற்றவர்கள் | 0352 |
| கல்வி கற்கும் மாணவர்கள் ஊக்குவிப்பு பணம் பெற்றவர்கள் | 0101 |

**◆ விளையாட்டுப்போட்டிகள் - கண்காட்சிகள்**

மாற்றுவலுவுடையோரின் திறமைகள், ஆற்றல்களை சமூகத்தில் வெளிக்கொணர கலைநிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன நிகழ்த்தப்பட்டதோடு எமது செயற்பாடுகள் சம்பந்தமான கண்காட்சி நிகழ்வு -2001 ஆம் ஆண்டு இணுவில் வைத்தியசாலையில் எமது நிறுவனம் இயங்கிய போதும் 2007 ஆம் ஆண்டு யாழ். நிறுவனத்திலும் நிகழ்த்தியதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

**◆ வெளிக்கள புனர்வாழ்வு சேவை**

மாற்று வலுவுடையோரை சமூகத்தில் இனங்கண்டு தேவையான புனர்வாழ்வு சேவைகளைப் பெற ஒழுங்கு செய்யவும், எமது பயனாளிகள் தொடர்நிலை பரிசோதனைகளைப் பெற வெளிக்கள புனர்வாழ்வு சேவை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

**◆ வன்னியில்இருந்து இடம்பெயர்ந் தோர்க்கு**

கடந்த வருடம் வன்னியில் நிகழ்ந்த யுத்தத்தினால் இடம்யெர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த வலுவிழந்தோரை ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தின் மூலம் எமது நிறுவனத்திற்கு அழைத்து வந்து அவயவங்கள் பொருத்தியதுடன் தங்கள் வதிவிடங்களுக்கு திரும்பிய வலுவிழந்தோர்க்கும் எமது சேவைகளை அர்ப்பணிப்புடன் வழங்கி வருகின்றோம்.

**◆ உள ஆற்றுகை**

யத்தத்தினாலும் பல்வேறு நெருக்கடிகளினாலும் பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுள்ளோரை ஆற்றுப்படுத்தும் முகமாக, இதம் நிறுவன உதவியாளர் இருவர்மூலம் வாரந் தோறும் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் எமது பயனாளிகளில் தேவைப்படுவோர்க்கு உளவள ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**நிர்வாகக் கட்டமைப்பு**


இந்நிறுவனத்தின் செயற்பாடுகளை மகளிரை அங்கத்தவர்களாகக் கொண்ட முகாமைத்துவக் குழுவினர் நிர்வகித்து வருகின்றனர்.இவர்கள் தன்னலமற்ற சேவையை இலவசமாக வழங்குவதை, நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். இவர்களோடு சேர்ந்து அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளும் நிர்வாக செயலாளரால் கவனிக்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு அனுசரணையாக செயற்கை அவயவம் பொருத்தும் பகுதி மற்றும் வலுவிழந்தோருக்கான நடமாடும் உபகரணங்கள் தயாரிக்கும் பகுதிகளில் நடைபெறுகின்றன.செயற்பாடுகளை அந்தந்தப் பகுதிகளுக்குரிய முகாமையாளர் கவனித்து வருகின்றார்கள்.

புனர்வாழ்வு என்பது, வலுவிழந்தோர் வலுவிழப்பை மறந்து மீண்டும் தமது ஆற்றலை அடைந்து குடும் பத்திலும், சமுதாயத்திலும் ஏனையோரைப் போன்று அனைத்திலும் சிறப்பாக செயற்பட உதவுதலாகும்.இதனை எமது முகாமைத்துவக் குழுவினரும் ஊழியர்களும் உணர்ந்து திறம்பட அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதுடன் வலுவிழந்தோர் வாழ்வுஇனிதே அமைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றனர்.

**யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**

நீங்கள் இனம்காணும் மாற்று வலுவுடையோர் தேவையான புனர்வாழ்வு சேவையைப்பெறஎம்முடன்தொடர்புகொள்ளவைத்தல், மாற்றுவலுவுடையோரின் திறமை, தகுதிகளை இனம்கண்டு அதற்கேற்ப பயிற்சிகள், தொழில் வாய்ப்புக்களைப் பெற சந்தர்ப்பமளித்தல் அல்லது வழியை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் பிறர் சிநேகம், மனித நேயமிக்கோர் எமது பணிக்கு மனமுவந்த தமது அன்பளிப்பு, நன்கொடைகளை வழங்குவதன்மூலம் மாற்றுவலுவடையோர் வாழ்வு சிறக்க உதவலாம்.

# பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு
## — சபாநாயகர் கடும் எச்சரிக்கை —



(கொழும்பு)

நாடாளுமன்ற நடவடிக்கைகளை குழப்பும் வகையில் செயற்பட்டால் சபையில் இருந்து வெளியேற்றப்படுவீர்கள் என சபாநாயகர் நேற்று பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கேட்ட கேள்விக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளிக்கும் போது, பிரதியமைச்சர் மேர்வின் சில்வா முறைகேடாக நடந்துகொண்டதை அடுத்தே சபாநாயகர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அனுராதபுரத்தில் அமைக்கப்படும் படைவீரர்களுக்கான வீடமைப்பு திட்டத்தில் உள்ள வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு 8 இலட்சம் ரூபா பணம் கோரப்படுவதாக சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பாதுகாப்பு அமைச்சுக்கு இந்த விடயத்தை தெரியப்படுத்தி பதிலை வழங்குவதாகத் தெரிவித்தார்.

விவாதத்தில் பங்கேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கருத்துரைக்கையில் 2010 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஹிந்தி திரைப்படத்தைப் போன்று அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அவசியத்திற்கேற்ப இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வரவு -செலவுத்திட்ட விவாதம் ஆரம்பமாகும் வேளையில் அந்தத்திட்டத்தை சமர்ப்பித்த பதில் நிதியமைச்சர் சரத் அமுனுகம சபையில் இல்லாமை குறித்த கேள்வியெழுப்பினார்.

இந்த நிலையில் அவருக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிற்கும்இடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. (6)

# 10 பொலிஸார் பணிநீக்கம்

(கொழும்பு)

மத்திய மாகாணங்களின் சில பொலிஸ் நிலையங்களில் ஒழுக்கத்தை மீறிய மற்றும் கடமையை நிறைவேற்றத் தவறியதாகத் தெரிவிக்கப்படும் 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தினவின் ஆலோசனையின் பேரில் அந்த உத்தியோகத்தர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

கடந்த சில மாதங்களில் ஒழுக்கத்தை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட 7 பொலிஸ் கான்ஸ்பிள்கள், 2 சார்ஜன்கள் மற்றும் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள சில உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (6)

# வடக்கு -கிழக்கிலுள்ள முன்பள்ளிகளை
## புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை

(கொழும்பு)

யுத்த சூழ்நிலை காரணமாக அழிவுக்குட்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முன்பள்ளிகளை மீண்டும் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளை சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நலன்புரி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதன்படி முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பாடசாலைகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் யோகபுரத்திலும், மன்னார் மாவட்டத்தில் மாந்தை பிரதேச செயலாளர் பிரிவில் குருங்கண்டலிலும் முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (6)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் கையளிப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் தங்கியிருந்த நிலையில் மீள்குடியேற்றப்பட்ட மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதாரப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மக்களுக்கான வாழ்வாதாரப் பொருட்களை கடந்த 25ஆம் திகதி வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் மேற்படி மக்களுக்கு வாழ்வாதாரப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது. (6)

# கிளிநொச்சி ஆயுர்வேத வைத்திய
## பாதுகாப்பு சபையை புனரமைக்க திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் முகமாக ஆயுர்வேத வைத்திய பாதுகாப்புச் சபையைப் புனரமைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த பல் வருடங்களாகப் பாரம்பரிய வைத்தியத்துறையின் வளர்ச்சிக்காக செயற்பட்டு வந்த இச்சபை ஆயுர்வேத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மூலிகை மற்றும் மருந்து உற்பத்தியிலும் சிகிச்சையளிப்பதிலும் ஈடுபட்டு வந்தது.

கடந்த யுத்தகாலத்தின் போது இப்பகுதியில் வசித்து வந்த சுதேச வைத்தியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் மீளக்குடியேறியதையடுத்து ஆயுர்வேத பாதுகாப்புச் சபை மீளவும் புனரமைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

இச்சபை நிறுவப்பட்டதும் சுதேச வைத்திய அமைச்சின் ஊடாக வைத்தியர்களுக்கான புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)


இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



பதினைந்தாம் திருவிழா

**இணுவைக் கந்தனே!**

காக்கின்ற கடவுளே கந்தா
கருணையுள்ளம் கொண்டவனே !
உனை நோக்கின்ற நொடியெல்லாம் எனக்கு
நோய் நொடிகளையெல்லாம் தீர்த்திடப்பா

நயவஞ்சக பூமியிலே வாடுகிறேன்
நான் படும் துயரத்தின் பேரவலம்
வேண்டாத போதும் எந்தனுக்கு
நீண்டு கொண்டு செல்லுதே !

முத்தமிழன் வித்தகனே கதிரேசா
சக்தியின் இளைய புதல்வனே
வேல் கொண்டு வந்து விரைந்து
வினைகளையெல்லாம் அறுத்திடு

வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி

**ஆறுதல் அளிப்பாய் ஆறுமுகா!**

உளமுருக உன்னடியே சரணமெனத் தொழுகின்றோம் !
உலகுய்ய உதித்தவனே! உமைபாலா !
- சரவணனே !
அளப்பரிய ஆற்றல்மிகு வேலதனைக் கொண்டவனே !
இழப்புகள் பலகண்டு நொந்துமிக வருந்துகின்ற
இதயங்கள் யாவுமிங்கு ஆறுதல் - அடைந்திடச் செய் !
வளமுடைய வாழ்வுதனை வையமதில் பெற்றிடவே
வள்ளலே அருள்புரிவாய் ! இணுவைப் பதியானே!

நாயன்மார்க்கட்டு, ப.மகேந்திரதாசன்

(1709)


# தனுனவின் சொத்துக்களை முடக்குமாறு
## குற்றப்புலனாய்வுக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்னவுக்கு சொந்தமாகவுள்ள சொத்துக்களை முடக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிடியாணை விடுக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகியுள்ள தனுன நேற்றுக் காலை 9 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதையடுத்தே கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிபதி இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

தனுன திலகரட்னவை நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரி துண்டுப்பிரசுரங்களை ஒட்டுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந் நிலையில் தனுனவுக்கு சொந்தமாக 7 வங்கிக் கணக்குகளில் 15 மில்லியன் ரூபா மற்றும் ஆயிரத்து 251 அமெரிக்க டொலர்கள் வைப்பிலிடப்பட்டிருக்கும் நிலையில் அவற்றினை முடக்குமாறு கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் தெரிவித்தது.

இதேவேளை தனுனவுக்கு சொந்தமாக ஏனைய சொத்துக்கள் உள்ளனவா என்பது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)



மகாஜனக் கல்லூரியின் சமூகக் கல்வி மன்றத்தினர் பாடசாலை மட்டத்தில் நடத்திய கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வினை கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் நாடாவை வெட்டி ஆரம்பித்துவைப்பதையும் கண்காட்சியினை மாணவர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# அதிக நாட்கள் கெடாமல் இருக்கும் புதிய தக்காளி இனம் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அதிக நாள்கள் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடிய புதிய தக்காளி இனத்தை அமெரிக்க வாழ் இந்திய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சாதாரண தக்காளி இனத்தில் ஈஸ்ட் எனப்படும் பூஞ்சையின் ஜீனைக் கலப்பினம் செய்து அவர்கள் இந்தச் சாதனையை புரிந்துள்ளனர்.

இதன் மூலம் நாம் அன்றாடம் உபயோகிக்கும் தக்காளியை விட ஒருவார காலத்துக்கும் மேல் இந்த வகை தக்காளிகள் கெடாமல் இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் பர்டியூ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி அவதார் ஹன்டா தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவினர் இந்த கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

இது குறித்து ஹன்டா கூறியிருப்பதாவது,

பல்வேறு உணவுப் பொருட்களின் கெட்டுப் போகும் தன்மையைக் குறைத்து நீண்ட நாட்கள் சேமித்து வைக்க இந்த கண்டு பிடிப்பு ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும். கடைகளில் தக்காளியை சேமித்து வைத்து விற்பனை செய்பவர்களுக்கு இது நல்ல தொரு பயனாக அமையும் என ஹன்டா தெரிவித்துள்ளதாக தாவரவியல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (6)

# தவறான சிகிச்சையளித்த இந்திய வைத்தியர் கைது

(மெல்போர்ன்)



தவறான சிகிச்சை மூலம் 3 பேரின் இறப்புக்கு காரணமான இந்திய வம்சாவளியை சேர்ந்த அறுவை சிகிச்சை டாக்டர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது அமெரிக்க குடியுரிமையை பெற்றுள்ள இந்திய வம்சாவளியை சேர்ந்த ஜெயந்த் படேல் (60) என்பவர் அறுவை சிகிச்சை மருத்துவராக இருந்து வந்துள்ளார். இவர் 2003 முதல் 2005 ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தின் பண்டபெர்க் பாஸ் என்ற மருத்துவமனையில் அறுவை சிகிச்சை இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் அங்கு வந்த ஜேம்ஸ் பிலிப்ஸ் (46), ஜெரி கெம்ஸ்(77), மெர்வின் மோரிஸ்(75) ஆகியோருக்கு தவறாக அறுவை சிகிச்சை செய்துள்ளார். இதில் அவர்கள் 3 பேரும் இறந்துள்ளனர். மேலும் சில நோயாளிகளுக்கும் தவறான சிகிச்சை அளித்துள்ளார். இது தொடர்பாக பொலிஸார் படேலை கைது செய்து 50 மணி நேரத்துக்கும் மேலாக அவரிடம் விசாரணை நடத்தினர்.

இதில் அவர் தவறான சிகிச்சை மூலம் 3 பேரை கொலை செய்தது உண்மையென கேட்டறியப்பட்டதால் அவருக்கு அதிக பட்ச தண்டனையாக ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது என்று பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (6)

# ஐஸ்லாந்து பெண் பிரதமர் தோழியை மணந்தார்

கடந்த 2009 ஆம் ஆண்டு ஐஸ்லாந்து நாட்டின் பெண் பிரதமரானவர் ஜோகன்னா சிகுர்டார்டோடிர்(68). இவர் தோழி ஜோனினா லியோஸ்டோடிர் உடன் நட்பாக பழகி பின்னர் ஓரின சேர்க்கையாளராக மாறினர்.

இவர்கள் திருமணம் செய்து கொள்ள அந்நாட்டு அரசியல் சட்டம் இடம் தராத நிலையில் இருவரும் அதிகார பூர்வமின்றி ஒன்றாக வாழ்ந்தனர்.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி ஓரின சேர்க்கையாளர்கள் திருமணத்துக்கு ஐஸ்லாந்து நாடாளுமன்றம் அனுமதி தந்து சட்டம் இயற்றியது.

இதையடுத்து நேற்று முன்தினம் பிரதமரும் அந்தப் பெண்ணும் சட்டப்படி திருமணம் செய்து கொண்டனர்.

தனது 50 ஆவது வயதில் கணவரைப் பிரிந்த ஜோகன்னா அதன் பின்னர் தோழி ஜோனினாவுடன் வாழ ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)






ரஷ்யாவின் சோச்சி கடற்கரை பகுதியில் உள்ள சலூன் ஒன்றில் காலை சுத்தம் செய்வதற்கு மீன் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நீர் தொட்டிக்குள் நுழைக்கப்பட்ட கால்களை சுத்தம் செய்யும் மீன்களை படத்தில் காணலாம்.

# அமெரிக்காவின் புதிய விண்வெளி ஆராய்ச்சிக் கொள்கை வெளியீடு

(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஒபாமா வெளியிட்டுள்ள புதிய விண்வெளி ஆராய்ச்சிக் கொள்கையில் இந்தியாவுடனான ஒத்துழைப்புக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் விண்வெளி ஆராய்ச்சி துறையில் முக்கிய சக்தியாக இந்தியா வளர்ந்து வருகிறது.

இந்நிலையில் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான பல திட்டங்களில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய கொள்கையின் படி இந்த இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பில் மேலும் முன்னேற்றம் ஏற்படும்.


விண்வெளி அறிவியல் மற்றும் ஆராய்ச்சி , புவி கண்காணிப்பு ,பருவ நிலை மாறுபாடு சுற்றுச் சூழல் தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல் , பேரிடர் தடுப்பு மற்றும் உதவி செயலிழந்த செயற்கைக் கோள்கள் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு போன்றவற்றில் ஒத்துழைப்புடன் அமெரிக்கா செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சர்வதேச விண்வெளி மையப்பணிகளில் சீனாவை சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் தற்போதைக்கு இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது மிகவும் சிக்கலான விடயம்.

தற் போதைக்கு இது குறித்து எந்த முடிவும் எடுக்க முடியாது என அமெரிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கொள்கை அலுவலக உயர் அதிகாரி தெரிவித்தார். (6)

# வாழ அதிகபணம் தேவைப்படும் நகரங்களின் தரவரிசைப்பட்டியல்



உலகிலேயே மிக அதிகம் செலவாகக் கூடிய நகரமாக ஆபிரிக்க நாடான அங்கோலாவின் தலைநகர் லுவாண்டா அமைந்துள்ளது.. மிகக் குறைவாக செலவு செய்யக் கூடிய நகரமாக பாகிஸ்தானின் கராச்சி அமைந்துள்ளது.

நாடு விட்டு நாடு போய் வாழ்பவர்களுக்கு மிக அதிகமாக செலவாகக் கூடிய நகரங்களின் தர வரிசைப் பட்டியல் ஒன்றை நிதித்துறை ஆய்வு நிறுவன மான மெர்சர் நிறுவனம் தயாரித்துள்ளது.

வாழ்க்கைச் செல வினங்கள் உலகிலே யே மிக அதிகம் கொண்ட நகரங்களின் பட்டியலில் லுவாண் டாவைத் தொடர்ந்து ஜப்பானின் டோக்கியோ மூன்றா வதாக சாட் நாட் டின் தலைநகரம் ன்ஜமினா அடுத்ததாக ரஷ் யத் தலைநகர் மொஸ்கோ ஆகியவை வந் துள்ளன.

ஏழாவது இடத்தில் கெபோன் என்ற ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த லீப்ரிவீல் வந்துள்ளது.

வாழ அதிக பணம் தேவைப்படும் நகரங்களாக உலகின் முதல் பத்து நகரங்களின் பட்டியலில் மூன்று ஆபிரிக்க நகரங்கள் இடம் பிடித்திருப்பது என்பது இதுவே முதல் முறை.

ஐந்து கண்டங்களில் இருந்து 240 பெரு நகரங்களை ஒப்பிட்டுப் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தங்குமிடத்துக்கான செலவு . போக்குவரத்து செலவு , உணவு ,உடைகள், பொழுதுபோக்கு போன்றவற்றுக்கு ஆகக் கூடிய செலவுகள் என்று பல்வேறு செலவினங்களை அளந்து ஒப்பிட்டு இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டிருந்தது.

லுவாண்டாவில் இரண்டு படுக்கையறைகள் கொண்ட ஒரு சொகுசு அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டில் தங்க வேண்டுமானால் மாதவாடகை கிட்டத்தட்ட ஏழாயிரம் அமெரிக்க டொலர்கள் ஆகிறது. லண்டனில் இதே போல ஒரு வீட்டுக்கு வாடகை சாதாரணமாக நான்காயிரம் டொலர்களுக்கு குறைவாகத் தான் இருக்கும் என்கிறார் மெர்சர் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த மிலன் டெய்லர்.

இந்தியாவின் புதுடில்லி இந்தப் பட்டியலில் 85 ஆவது இடத்திலும் மும்பை 89 ஆவது இடத்திலும் வந்துள்ளன. (6)



லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற உலக கண்காட்சியில் 6,500 வருடங்களுக்கு முந்தைய மம்மி(சடலம்) இடம்பெற்றிருக்கிறது. இந்த மம்மி பார்வையாளர்களை மிகவும் கவர்ந்துள்ளது.

ஆலோசனை நல்லதாயிருந்தால் அதனை எவர் கூறினார் என்பதுபற்றி கவலை கொள்ளவேண்டாம் - அப்துல் றஹிம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நிபுணர் குழுவை கலைக்காவிட்டால் ஐ.நா.அலுவலகம் முற்றுகையிடப்படும்

## அமைச்சர் விமல் வீரவன்ச எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவை கலைக்காவிட்டால் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தை முற்றுகையிடப் போவதாக இலங்கையின் அமைச்சர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

தேசிய சுந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச அரசாங்கத்தின் அமைச்சராக செயற்படுகிறார்.

இந்த நிலையில் இலங்கை தொடர்பாக ஆராய் வதற்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

ஏற்கனவே அரசாங்கத்தின் அங்கமான ஜாதிக ஹெல உறுமயக் கட்சியும் நிபுணர் குழு நியமனத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தின்முன்னால் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# தோட்டத் தொழிலாளிகளாக மாற்றவா வன்னியில் இறப்பர் செய்கை

வன்னிப் பெருநிலப்பரப்பின் முக்கியமான கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்தியத்தில் இறப்பர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பு தமிழ் மக்களின் விவசாய பூமி. நெற்தானியம் முதல் விவசாய உணவுத் தானியங்களை விளைவிக்கக் கூடிய மண்.

என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த போது வன்னிப் பெருநிலப்பரப்பு நெற்களஞ்சியமாக விளங்கியது.

அதுதொடக்கம் வன்னியில் விவசாயச் செய்கையில் தமிழ் மக்கள் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்டு வந்தனர்.

கொடூர யுத்தம் அந்த மக்களின் தேட்டங்களை எல்லாம் சங்காரம் செய்தாயிற்று.

இப்போது அவர்கள் மீண்டும் குடியேறுகின்றனர். நிச்சயம் அங்கு மீண்டும் உணவுத் தானியங்கள் விளையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது சுமார் நானூறு ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பர் செய்கைக்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதானது வன்னியிலுள்ள தமிழ்மக்களை பெருந்தோட்டச் செய்கைக்கு மாற்றுமொரு நடவடிக்கை என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும்.

அதேநேரம் மலையகத்தில் தமிழ் மக்கள் பெருந்தோட்டத் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டு இன்றுவரை அவர்கள் மீளமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த அவலம் தேயிலை,இறப்பர் தோட்டங்கள் அரசினதும் முதலாளி வர்க்கத்தினதும் ஆதிக்கத்திற்குள் அகப்பட்டதன் விளைவாக ஏற்பட்டதாகும்.

எனவே வன்னிப் பெரு நிலப்பரப்பில் 400 ஏக்கர் நிலத்தில் இறப்பர் செய்கையை மேற்கொள்வதன் மூலம் மிகப்பெரியதொரு காடழிப்பையும், அதேநேரம் விவசாயச் செய்கையில் இருந்து பெருந்தோட்ட விவசாயத்திற்கு தமிழ் மக்களை நிலைமாற்றம் செய்வதுமான நிகழ்வாக அமையும்.

ஆகவே வன்னியில் இறப்பர்செய்கை மேற்கொள்வதை முழுமையாக எதிர்ப்பதற்கு புத்திஜீவிகள் முன்வரவேண்டும்.

தோட்டச்செய்கையை அரசு விரும்பினால் தீவகத்தில் வடக்கு வீதியிலுள்ள நிலப்பரப்பில் சவுக்குத் தோட்டம் செய்யலாம். தேவையாயின் அங்கு சவுக்குத் தோட்டம் செய்யமுடியுமா என்பதை ஆராய்வதற்கு இந்திய மற்றும் சீன நாட்டவர்களை அழைத்து வந்து காட்டலாம்.

சவுக்குச் செய்கை யாழ்ப்பாண மக்களின் விறகுத் தேவையை பூர்த்திசெய்யும் அல்லவா?

# யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களாக இடம்பெற்று வந்த யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்பு யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் கற்பிக்கும் போதனாசிரியர், கற்பித்தலின் போது மாணவர்களுடன் கடுமையான முறையில் நடந்து கொண்டார் என்ற ரீதியில் தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்களால் கடந்த மாதம் 05 ஆம் திகதி அன்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து மனித உரிமை ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினை வாபஸ் பெறமுடியும். கல்வி நிர்வாகத்திடம் மன்னிப்புக் கோரும் படியும் கடந்த மாதம் 10 ஆம் திகதி அங்கு கல்வி பயிலும் 2009 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த 106 மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதன் பின் பெற்றோர்களும் மாணவர்களும் கடந்த மாதம் 14 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் மீளவும் முறைப்பாடு ஒன்றினை தாக்கல் செய்திருந் தனர். இதனையடுத்து மாணவர்களிடையே மனித உரிமை ஆணைக்குழுவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது, தாம் கல்லூரிக்கு வருகை தருவதில் எவ்வித தடங்கல் இல்லை என கூறியிருந்த போதிலும் கற்றல் செயற்பாட்டிற்காக கல்லூரிக்கு சென்றவேளை மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

அதன் பின் குறித்த மாணவர்களின் பெற்றோர்களும் மாணவர்களும் மீண்டும் ஒரு முறை மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த மாதம் 21 ஆம் திகதி முறைப்பாட்டினை தாக்கல் செய்துள்ளார்.

மாணவர்களால் முறைப்பாடு தாக்கல் செய்யபட்டமைக்கு அமைவாக, யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவால் கடந்த மாதம் 28 ஆம் திகதி இருதரப்பிற்கும் இடையே 41/2 மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் தீர்மானிப்பதற்கு 2 நாள் அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி நிர்வாகத்தால் நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நேற்று முதல் கல்விச் செயற்பாட்டிற்காக மாணவர்களை மீள ஏற்றுக் கொள்வதாக கல்லூரியின் பதில் அதிபரும், யாழ்.போதனா வைத்தியாசலையின் பணிப்பாளரும் கையொப்பம் இட்டு உறுதியளித்துள்ளனர். -(6-7)

## எங்கிருந்தாலும் வாழ்க

நீண்டகாலம்
அரச பதவியிலிருந்து
நற்சேவை புரிந்தமை
நாடறிந்த விடயம்
இக்கட்டான கால கட்டத்தில்
வவுனியாவில் நற்சேவை புரிந்து
இங்கும் நற்சேவை புரிந்து
சினம் காட்டாது
புன்முறுவலுடன் எவரையும்
வரவேற்கும் உம் மனப்பாங்கு
இளைஞனை போல துடிதுடிப்பை
தேர்தல் காலத்தில்
நன்கு அறிந்தேன் இச் சமூகத்தில்
இனியும் நற்சேவை புரிய
இறைவனை வேண்டுகின்றேன்

நீண்டகாலம் அரச அதிபராக உயர் பதவி வகித்த க.கணேஷ் இளைப்பாறிச் செல்வதை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.

து.சுரேந்திரன்
பதிவாளர்,குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைதொழில் அபிவிருத்தி அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும், யாழ் தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கே.என். டக்ளஸ்.தேவானந்தாவினதும் வட மாகாண ஆளுநர் கௌரவ மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினதும் இணைத் தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (6)

# உன்னை அறிந்து கொள் -பாபா



மனிதன் தன்னைத் தானே அறிந்து கொள்வதற்கு இறைவன் அவனுக்கு களங்கமற்ற, தெளிவான புத்தியை அருளியிருக்கிறார். புத்தி என்பது அன்பு எனும் பாதரஸம் பின்புறம் பூசப் பெற்ற கண்ணாடியாகும். பாதரஸம் பூசப் பெறாவிடில் எனது பிரதிபலிப்பை என்னால் காணமுடியாது. இதனால் கண்ணாடிக்கூடாக வெளியில் இருப்பதைத்தான் காண்கின்றோம்.

உனது உள்ளத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அன்பு எனும் பாதரஸத்தை புத்தி எனும் கண்ணாடியின் பின்புறம் பூச வேண்டும். அத்தகைய இரசாயனம் பூசப்படாமல் இருப்பதால் உன்னை நீ அறிந்து கொள்ள இயலவில்லை. உன்னை நீ அறிந்து கொள்வதற்கு அன்பு எனும் ரஸம் பூசப்படுதல் அவசியம். தன்னைத்தானே தனக்கு நிருபித்துக் கொள்வதற்கு இறைவன் புத்தியெனும் கண்ணாடியை பிரசாதமாக வழங்கியிருக்கிறார். இதைக் கொண்டு மனிதன் தன்னைப் பார்த்துக் கொள்ளவில்லை. கண்ணாடியை பிறர் பக்கம் திருப்புகிறான். பிறர் முகத்தையே பார்க்கிறான். தன்னுடைய முகத்தை பார்ப்பது இல்லை.

மேலும் புத்தியைக் கொண்டு உலகத்தை அறிய முற்படுகின்றோம். நீர் யார்? பெயர் என்ன? ஊர் எது என கேட்கின்றோம். பிரபஞ்சத்தைப் பற்றிக் கேட்கின்றோமேயொழிய தன்னைப் பற்றியோ ; இறைவனைப் பற்றியோ கேள்வி கேட்பதில்லை. பூமியில் மட்டுமல்ல ஆகாய, அடுத்துள்ள கோள்களுக்கும் போகின்றான். தனக்குள் மட்டும் போவதில்லை. தன்னுடைய இதயத்தைதட்டிப்பார்ப்பதில்லை. இதனால் விநோத வடிவங்களை நாடுகின்றான். சுயநலம் மேலாடுகின்றது. இதனால் ஆன்மீகம் கெட்டு இறை நம்பிக்கை அற்று உலகமே நரகமாய் தோற்றப்படுகின்றது.

ஜெய்சாயிராம் யாதவன்

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரிடம் கப்பம் கேட்டு மர்மநபர் மிரட்டியதால் பரபரப்பு



(பெங்களூர்)

வாழும் கலையமைப்பின் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரிடம் 42 கோடி ரூபா கேட்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பெங்களூர் கனகபுரா சாலையில் வாழும் கலை ஆசிரமம் உள்ளது. அங்கு பல்வேறு ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். அதேபோல் நேற்று முன்தினம் நிகழ்ச்சியொன்று நடைபெற்றபோது, தொலைபேசியில் மர்மநபர் ஒருவன் மிரட்டல் விடுத்துள்ளான். 42 கோடி ரூபா பணம் தர வேண்டுமென்றும், இல்லையென்றால் வாழும் கலை அமைப்பிற்கு அவமதிப்பு ஏற்படும் என்றும் அப்போது அவன் எச்சரித்துள்ளான்.

இதுதொடர்பாக ஆச்சிரம நிர்வாகிகள் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

அண்மையில் ரவிசங்கர் மீது ஆசிரமத்தின அருகே உள்ள பண்ணை நிர்வாகி துப்பாக்கியால் சுட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (6)

# நளினியை புழல் சிறைக்கு மாற்றியது ஏன்?

## சிறைத்துறை அதிகாரி விளக்கம்

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினியை புழல் சிறைக்கு மாற்றியது ஏன் என்பது குறித்து சிறைத்துறை அதிகாரி ஷியாம் சுந்தர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைது நளினி தன்னை வேலூர் பெண்கள் சிறையில் இருந்து சென்னை புழல் சிறைக்கு மாற்றும்படி மனு கொடுத்திருந்தார்.

ஒரு சிறையில் இருந்து கைதிகளை மற்றொரு சிறைக்கு மாற்றம் செய்யப்படும் மனுக்கள் மீது வரிசைப்படிதான் நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி நளினியின் மனு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை அவருக்கான வரிசை வந்தது. அதன் அடிப்படையில் அவரது மனு பரிசீலிக்கப்பட்டு புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார். (6)

# தனி ஈழம் குறித்து செம்மொழி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றாதது ஏன்?

## விஜயகாந்த் கேள்வி

தமிழ்ஈழத்தைப் பெற்று தருவது குறித்து செம்மொழி மாநாட்டில் தீர்மானம நிறைவேற்றாதது ஏன் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை க்கு உடனடியாக அரசியல் தீர்வுகாண இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செம்மொழி மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது.

ஆரம்பம் முதல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தமிழ் ஈழம் ஒன்றுதான் தீர்வு என்று வற்புறுத்தி வந்தவர் கலைஞர்.

தமிழின வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு இனப்படுகொலை இலங்கையில் நடந்த பிறகு இந்தக் கோரிக்கை இன்னும் வலுவடைந்துள்ளது. இன்று இனப் படுகொலைக்கு ஆளான இலங்கைத் தமிழர்கள், தங்களுக்கென ஒருதாயகத்தை ஏற்கனவே பெற்றுள்ளனர். அதைத் தக்க வைக்கும் வகையில் எதிர்காலத்தில் தமிழினப் பாதுகாப்பிற்கு அவர்கள் கோரும் தமிழ் ஈழத்தை பெற்றுத்தர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றவில்லை? என்று கேள்வியெழுப்பியுள்ளார். (6)

# நித்தியானந்தா - ரஞ்சிதா சந்திப்பால் பரபரப்பு

தலைமறைவாக இருந்த நடிகை ரஞ்சிதா சமீபத்தில் யாருக்கும் தெரியாமல் சென்னை வந்து சென்றுள்ளார். அவர் பத்திரிகை ஒன்றுக்கும் பேட்டியளித்துள்ளார்.

அவர் பேட்டியளித்துள்ள அதே நாளில் நித்தியானந்தாவும் பெங்களூரில் பேட்டி கொடுத்தார்.

நித்தியானந்தா -ரஞ்சிதா சந்திப்பு நடந்த பிறகே இருவரும் பேட்டி அளித்ததாகவும் அவரது யோசனையின் பேரில் தான் ரஞ்சிதா புத்தகம் எழுதுகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவரது ஆன்மீகப் பணிகள் சிறப்பானவை என்று புத்தகத்தில் குறிப்பிடுவார் என்றும் ஆபாச வீடியோப்பட விடயங்களும் புத்தகத்தில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திப்பில் ரஞ்சிதா தனக்கு ஆதரவாக இருப்பதை நித்தியானந்தா உணர்ந்து கொண்டதாக் தெரிவிக்கப்படும் அதேவேளை தொடர்ந்து ஆசிரமத்தோடு தொடர்புகொண்டு பேசி வருவதாகவும் கூறப்படுகிறது. (6)




# மாவோயிஸ்டுகளை ஒடுக்க இராணுவத்திற்கு கொரில்லா பயிற்சி

## மத்திய அரசு ஆலோசனை

(டில்லி)

மாவோயிஸ்டுகளை ஒடுக்க துணை இராணுவப் படைக்கு கொரில்லா பயிற்சி அளிப்பது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தீவிர ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ் டுகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 26 மத்திய ரிசேர்வ் படை பொலிஸார் கொல்லப்பட்டனர். இது நாட்டில் பெரும் பரப்ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாவோயிஸ்டுகள் அண்மைக்காலமாக இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டுவருவதைத் தடுக்க துணை இராணுவப் படையினருக்கு கொரில்லா பயிற்சி அளிக்க மத்திய உள் துறை திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சு செயலர் ஜி.கே. பிள்ளையுடன் சிதம்பரம் அவசர ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் இராணுவ உயரதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் டில்லியில் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார். (6)

# சட்டீஸ்கரில் நக்ஸல் தாக்குதலில் 30 பொலிஸார் கொல்லப்பட்டனர்



(ராய்ப்பூர்)

நக்சலைட் தீவிரவாதிகள் சட்டீஸ்கரில் நேற்று முன்தினம் மீண்டும் பயங்கர தாக்குதல்நடத்தினர். இதில்மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த 30வீரர்கள் பலியானார்கள். 23 பேர் படுகாயம் அடைந்தனர்.

சட்டீஸ்கர் மாநிலம் நாராயணன் பூர் மாவட்டத்தில் பஸ்தர் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகலில் இந்தச் சம்பவம் நடந்தது. மலைப் பாதையில் தடைகளை அகற்றிய மத்திய பொலிஸாரை மலைப் பகுதியில் சுற்றி நின்று இந்தப் பயங்கர தாக்குதலை நடத்தினர். சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த நக்சலைட் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.


கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி தண்டேவடா மாவட் டத்தில் நடத்திய திடீர் தாக்குதலில் 75 மத்திய ரிசேர்வ் படை பொலிஸார் பலியான செய்தி நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்தது. இதன்பிறகு இதே மாநிலத்தில் உள்ள பிஜப்பூரில் வாகனம் சிக்கி 8 வீரர்கள் உயிரிழந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் சட்டீஸ்கரில் நாராயண்பூர் மாவட்டம் பஸ்தர் காட்டுப் பகுதியில் துராய் பொலிஸ் நிலைய வரம்புக்கு உட்பட்ட இடத்தில் வீதிகளில் நக்சலைட்கள் தடைகளை ஏற்படுத்தி இருந்தனர். இந்த தடைகளை 70 பொலிஸார் பிற்பகலில் அகற்றிவிட்டு அருகில் உள்ள முகாமுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது மலை உச்சியில் 90 நக்சலைட் இயக்க தீவிரவாதிகள் சுற்றிவளைத்து சரமாரியாக சுட்டனர். இதில் 30 பொலிஸார் பலியானார்கள். 23 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு உடனடியாக மேலதிக படைகள் அனுப்பப்பட்டன. காயம் அடைந்த வீரர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். காயம் அடைந்தவர்களில் 4பேர் நிலைமை மோசமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப்பகுதியில் நக்சலைட்டுகளுக்கு எதிராக துணை இராணுவம்எடுக்கும் நடவடிக்கையை கண்டித்து 2நாள் கடையடைப்பு நடத்த நக்சலைட்டுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.


இதையொட்டி, இந்தப் பகுதியில் பலத்த பாதுகாப்பு போட்டப்பட்டுள்ளது. போக்குவரத்தை தடை செய்ய வீதிகளில் நக்சலைட்டுகள் பாறாங்கற்களை போட்டு தடைகளை அகற்றி விட்டு வந்தபோது இந்தத் தாக்குதல் நடந்ததாக டில்லியில் சி.ஆர்.எப். தலைவர் விக்ரம் ஸ்ரீ வத்சவா கூறினார்.

தண்டேவடா சம்பவத்துக்குப் பிறகு நக்சலைட்களை எதிர்த்துபோரிட இராணு வத்தை களத்தில் இறக்குவது பற்றி மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்தது. ஆனால், இன்னும் முடிவு எடுக்கவில்லை என்றார். (6)



இந்தியாவின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தி நிலை யம் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில் யாலிஸந்திரா கிராமத்தில் தொடங்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி தனது மின் உற்பத்தியினை தொடங்கியது.

# விஜயின் 'காவல்காரன்' படத்திற்கெதிராக வழக்கு



(சென்னை)

பிரபல மலையாளப் பட தயாரிப்பாளர் ஜோர்ஜ் ஜானி தோமஸ் சென்னை சைதாப்பேட்டை நீதவான் நீதிமன்றத்தில் விஜய் படத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில் கூறியவை வருமாறு,

நான் பாடிகார்ட் படத்தை மலையாள மொழியில் தயாரித்தேன். இந்தப் படத்தை சித்திக் இயக்கி இருந்தார். 45 நாட்களில் படத்தை முடித்து விடுவேன் என்றார். ஆனால் படப்பிடிப்பு 120 நாட்கள் நடந்தது. இந்த தாமதத்தினால் படம் எதிர்பார்த்தபடி போகவில்லை.

இந்தப் படத்துக்கு கோகுலம் சிட்பண்ட்சில் இருந்து ரூபாய் 3 கோடியே 90 இலட்சம் கடன் வாங்கி இருந்தேன். அதற்கு அடமானமாக பாடிகார்ட் படத்தின் பிறமொழி உரிமைகளை கொடுத்து வைத்தேன்.

இயக்குநர் சித்திக் எனக்கு தெரியாமல் முன்பு வெள்ளைத்தாளில் வாங்கிய கையெழுத்தை வைத்து மோசடியாக பாடிகார்ட் படத்தின் தமிழ் தயாரிப்பு உரிமையை ரமேஷ்பாபு என்பவருக்கு விற்றுள்ளார். இந்த, உரிமை அடிப்படையில் சித்திக் இயக்கத்தில் விஜய் நடிக்கும் காவல்காரன் படம் தயாராகி வருகிறது.

இதனால் பல வகைகளில் நான் நஷ்டம் அடைந்துள்ளேன். சட்டவிரோதமாக செயல்பட்ட சித்திக் மீதுவழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தப் படத்தின் உரிமைகளை எனக்கு மீட்டுத்தர வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிட்டுள்ளார். (6)

# தலைவர்கள் மட்டும் தமிழரசுக் கட்சியின்...

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவுள்ளதாக வெளியான தகவலையடுத்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் உப தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாக நேற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949 ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம்அவர்கள் ஆரம்பித்தபோது அதனை வெறும் கட்சியாக மட்டும் இனங்காணாது தமிழ் மக்களுக்கு விமோசனமளிக்கும் ஒரு இயக்கமாகவே இனங்கண்டார்.

இத்தகைய இயக்கம் தமிழ் மொழி பேசும் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஒரு சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்பதே அவரது கனவாகும்.

இதனால்தான் தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளின் சின்னமாக 'வீடு' (வீடுபேறு அளிப்பது) அமைந்தது. தந்தை செல்வநாயகம், தலைவர் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களின் பாதங்கள் வடக்குக் கிழக்கின் பட்டிதொட்டியெங்கும் படியத் தமிழ்த் தேசியம் வலுவான சக்தியாக உருவெடுத்தது.

தலைவர்களினதும் தியாகத்தாலும் தொண்டர்களது அர்ப்பணிப்பாலும் அப்பளுக்கற்ற தியாகத்தாலும் வடக்குக் கிழக்கு மாகாண மக்களின் இதயங்களில் வீட்டுச் சின்னமே தமக்கு விமோசனமளிப்பது என்ற எண்ணக்கரு உருவாகி ஆல விருட்சமாக வளர்ச்சி பெற்றது.

தமிழரசுக் கட்சி மேற்கொண்ட போராட்டங்களும் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் ஏனைய தமிழ்க் கட்சிகளை விட இதனை முதன்மை நிலைக்கு இட்டச் சென்றன.

இருந்தும் நமக்குள் ஏட்டிக்குப்போட்டி போடும் அரசியலைத் தவிர்க்கும் நோக்கில் இக் கட்சி தமிழ்க் காங்கிரஸுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக உதயசூரியன் சின்னத்தில் இயங்கினாலும் அதன் முதன்மையும் தனித்துவமும் இக் கூட்டமைப்பில் பேணப்பட்டது.

எனினும் சித்தாந்த ரீதியிலன்றி வெறும் ஒற்றுமைக்கான கூட்டமைப்பு என்ற கோஷத்தின் அடிப்படையில் ஏற்பட்ட இவ்விணைப்பின் விபரீத விளைவுகளை அண்மைக்கால சம்பவங்கள் மட்டுமன்றி நடந்து முடிந்த தேர்தலும் துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளது.

**வீட்டை விரும்பிய விடுதலைப்புலிகள்**

தமிழரசுக் கட்சியின் வீடுதான் தமிழர் தாயகத்தை இணைக்கும் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய சின்னம் என்பதாலும் ஏனைய தமிழ்க் கட்சிகளைப் போலன்றி வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் வியாபித்துள்ள கட்சி என்பதாலும் 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான போது இதிலேதான் இக் கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டி போட வேண்டும் என்று விடுதலைப்புலிகளும் விரும்பினர்.

இதனை ஏனைய கட்சிகளும் ஏற்றன. அன்று இக் கூட்டமைப்பு உருவானபோது நல்லிணக்க அடிப்படையில்தான் ஒவ்வொரு கட்சியும் செயற்பட்டன.

எனினும் கடந்த காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடின்மையும் கடந்த தேர்தலில் நிற்போரைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட இழுபறிகளும் இதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் ஒருகால் உள்வீட்டுப் பிள்ளைகளாயிருந்து பின்னர் விலகிச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் விதண்டாவாதங்களும் இத் தேர்தலில் போட்டி போட்டோர் பற்றித் தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்ட விமர்சனங்களும் இதன் விளைவாக அவர்கள் மத்தியில் கால்கொண்ட அக்கறையின்மையுமே வட பகுதியில் தமிழரசுக் கட்சியைக் களத்தில் பின்னடையச் செய்தன.

**கட்சியாகப் பதிவு தேவைதானா?**

இப் பின்னணியில் அதுவும் கடந்த கால அனுபவங்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்தல் காலத்தின் தேவைதானா? என்பது பற்றி மிக ஆழமாக சிந்திக்க வேண்டியதொன்றாகவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கட்டாயம் ஒரு கட்சியாகப் பதிவு செய்தல் வேண்டும் என்பதில் தலைவர்கள் முரண்பிடித்து ஒரு தலைப்பட்சமாகத் தீர்மானிக்க முடியாது. மிக நீண்ட ஜனநாயக பாரம்பரியத்தையுடைய இக் கட்சியின் இதற்கான வழிமுறைகள்பல உள.

மத்திய குழு, பொதுச் சபை ஆகியவற்றினுள் இது பற்றி விவாதிக்கப்படல் வேண்டும். இவையே கட்சியின் கொள்கை எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றை வகிக்கும் கருவிகளாகும்.

மாநாடு முடிந்து ஆறு மாதங்கள் ஆகியும் இவற்றைக் கூட்டிக் கட்சித் தொண்டர்களுடன் கருத்துக்களைப் பரிமாறத் தலைமைப் பீடம் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத சூழலில் மத்திய குழுவைக் கூட்டும்படி 02.06.2010 இல் தலைவர்/செயலாளர் ஆகியோருக்குக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் என்ற ரீதியில் ஒரு கடிதத்தினை அனுப்பியிருந்தோம்.

இற்றைவரை கடிதம் கிடைத்தது என்று கூடப் பதில் இல்லை.

**தன்னிச்சையான செயற்பாடு**

பொதுவாகக் கட்சித் தொண்டர்கள் மத்தியில் தலைமைப்பீடம் தங்களைக் கலந்தாலோசிக்காது தன்னிச்சையாகச் செயற்படுகின்றது என்ற கருத்து நிலவுகின்றது. தலைமைப் பீடம் எதேச்சையாக செயற்பட்டதை அண்மைக்கால நிகழ்வுகளும் எடுத்துக் காட்டியுள்ளன.

எவ்வாறிருப்பினும் மிக நீண்ட ஜனநாயகப் பின்னணியுடைய இக் கட்சியில் இத்தகைய போக்கினை அனுமதிக்க முடியாது. இதனால் கட்சியின் எதிர்கால ஆரோக்கியமான வளர்ச்சி தடைப்பட்டு விடும்.

எதுவித இலட்சியப்பற்றுமற்ற வெறும் வழிப்போக்கர்கள்தான் கட்சியில் நுழைந்து தொண்டர்களுக்கு ஆணையிடும் நிலை ஏற்படும். இது மிக மிக ஆபத்தான நிலையாகும்.

இத்தகைய நிலை வெள்ளைக் கையர்களாக எமது மறைந்த தலைவர்களது தியாகத்திற்கும் எமது ஜனநாயகப் பாரம்பரியத்திற்கும் அழிவைத் தேடித் தந்தே விடும்.

எனினும் இனியும் காலம் தாழ்த்தாது உடனே கட்சியின் மத்திய குழுவையும் பொதுக் குழுவையும் கூட்டல் வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படும் நடவடிக்கை பற்றி அலசி ஆராயப்பட வேண்டும்.

இவ்வாறு பதிவு செய்யப்படும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னம் யாது என்பதில் தெளிவு வேண்டும். எக்காரணம் கொண்டும் வீட்டுச் சின்னத்தைத் பரிமாற்றம்செய்ய முடியாது. விலைபேசவும் முடியாது. காரணம் இன்று இவ் வீட்டுச் சின்னம் தமிழரசுக் கட்சியின் தியாகிகளின் நினைவாலயமாகவும் மிளிர்கின்றது.

**கண்ணீராலும் செந்நீராலும் வளர்க்கப்பட்ட கட்சி**

தலைவர்களினதும் தொண்டர்களினதும் கண்ணீராலும் செந்நீராலும் வளர்க்கப்பட்ட இத் தமிழரசுக் கட்சி என்ற ஆல மரத்தைப் புதுமுகங்கள் வெட்டித் தறிக்கத் தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் இடம் கொடுக்கக் கூடாது. அவ்வாறு இடம் கொடுத்தால் இப் புதுமுகங்களே தாம்தாம் நவயுக தியாகிகள் எனத் தம் பட்டம் அடித்துக் கொண்டு எமது தலைவர்கள் செய்த தியாகத்தையும் எம் கட்சியின் தியாக வரலாற்றையும் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள்.

இவ்வாறு நடைபெற்றால் தந்தை செல்வநாயகம், கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், திருமலை இராசவரோதயம், பட்டிருப்பு இராசமாணிக்கம், தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரையும் அவர்களின் பங்களிப்புகளையும் எதிர்கால சந்ததியினர் அறியாவண்ணம் இவ் நவஉலகத் தியாகிகள் புறந்தள்ளி விடுவார்கள்.

**நீதிமன்றம் செல்வோம்**

இன்றெல்லாம் கட்சிகளைப் புனரமைக்கும் பணி ஈழத்தில் நடைபெறுகின்றது. இத்தகைய பணியிலேயேதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இனியும் காலம் தாழ்த்தாது இறங்க வேண்டும்.

எவராவது தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தையோ அன்றி அதன் கொடியையோ சுய நலத்திற்காக விலைபேச முற்பட்டால் நீதி மன்றம் சென்றாவது இதனைத் தடுத்து நிறுத்துதல் ஒவ்வொரு தமிழரசுக் கட்சியின் தொண்டனின் தலையாய கடமை என்று வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியதுபோன்று இன்று அரசியல் என்பது பொய்யும் புரட்டும் புளுகும் நிறைந்த வியாபாரமாகி விட்டது. உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல்வாதிகளால் தம் புகழ்பாட இதய சுத்தியின்றி உச்சரிக்கப்படும் வெறும் பதங்களாகி விட்டன.

அவர்களது அன்றாட வாழ்க்கையில் இவற்றுக்கு இடமேயில்லை என்றுள்ளது.(ச-5)

## உலகக் கிண்ண வரலாற்றில்

# பராகுவே முதல்முறையாக காலிறுதியில்; டைபிரேக்கரில் ஜப்பான் தோல்வி

பராகுவே 5:3 என்ற கோல் கணக்கில் டைபிரேக்கரில் யப்பான் அணியை வீழ்த்தி உலகக் கிண்ணத் தொடரில் முதல் முறையாகக் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் பிரிட்டோரியாவில் நடந்த 2-வது சுற்று ஆட்டத்தில் யப்பான்-பராகுவே அணிகள் மோதின.

ஏற்கனவே ஆசியாவைச் சேர்ந்த தென் கொரியா 2-வது சுற்றில் உருகுவேயிடம் தோல்வி கண்டு வெளியேறி விட்டது.

கடைசியாக யப்பான் மட்டுமே எஞ்சியிருந்தது. இந்த இரு அணிகளும் 80 ஆண்டு கால உலகக் கிண்ண வரலாற்றில் காலிறுதியாட்டத்திற்கு முன்னேறியதில்லை.

போட்டி ஆரம்பமாகியதும் விறுவிறுப்பாக இருந்தது. ஆனால் இரு அணிகளுமே கோல் அடிப்பதில் கோட்டை விட்டன. இதனால் ஆட்டம் போரடித்தது.

90 நிமிட ஆட்டத்திலும் கோல் அடிக்காததால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. கூடுதல் நேரத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க டைபிரேக்கர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் பராகுவே அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. யப்பான் வீரர் யூச்சி கானமோ அடித்த பெனாட்டி கோல் கம்பத்தில் மோதி வெளியேறியது ஆசியாவின் கடைசி நம்பிக்கையைத் தகர்த்தது.

பராகுவே வீரர்கள் பாரட்டோ, பாரியாஸ், ரிவெரோஸ், வால்டெஸ், கார்டஸ் ஆகியோர் 5 வாய்ப்புக்களையும் கோலாக்கினர்.

யப்பான் அணியில் யாஷிதோர் ஈன்டோ, மகாதோ, ஹசாபி, கவாஷிகி ஹோண்டா ஆகியோர் கோல் அடித்தனர்.

வெற்றி கண்ட பராகுவே அணி உலகக் கிண்ண கால்பந் தாட்டத் தொடரில் முதல் முறையாகக் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இதனால் பராகுவேயில் உற்சாக வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது.

# ஸ்பெயின் அணி காலிறுதிக்குள் நுழைவு; போர்த்துகல் தொடரிலிருந்து வெளியேறியது

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் மற்றொரு அதிர்ச்சி. பரபரப்பான ரவுண்ட் ஒவ்-16 போட்டியில் ஸ்பெயின் அணி போர்த்துக்கல் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன் மூலம் உலகின் நம்பர்-2 அணியான ஸ்பெயின் காலிறுதிக்கு முன்னேறியது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கல் வெளியேறியது.

தென்னாபிரிக்காவில் 19-வது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் நடக்கின்றது. நேற்று முந்தினம் நடந்த ரவுண்ட் ஒவ்-16 போட்டியின் யூரோ சம்பியன் ஸ்பெயின், போர்த்துகல்லை (உலகின் நம்பர்-3) எதிர்கொண்டது.

இரு அணிகளும் சமபலம் வாய்ந் தவை என்பதால் எதிர்பார்ப்பு எகிறியது.

**ஸ்பெயின் ஆதிக்கம்**

ஆரம்பத்திலிருந்தே ஸ்பெயின் ஆதிக்கம் செலுத்தியது. 2-வது நிமிடத்தில் டோரஸ் அடித்த பந்தைப் போர்த்துகல் கோல் காப்பாளர் எட்வார்டோ துடிப்பாகத் தடுத்தார்.

இதற்குப் பின் மற்றொரு ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லா அடுத்தடுத்துத் தாக்குதல் நடத்தி மிரட்டினார். 22-வது நிமிடத்தில் போர்த்துகல் அணிக்கு கிடைத்த வாய்ப்பை டியாகோ கோட்டை விட்டார்.

28-வது நிமிடத்தில் போர்த்துகல் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ பிரீகிக் வாய்ப்பை வீணாக்கினார். பின் 38-வது நிமிடத்தில் றொனால்டோ பந்தை அருமையாகப் பாஸ் செய்தார்.

ஆனால் அல்மீடா தலையால் முட்டி கோல் அடிக்க தவறினார்.

முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது.

**டேவிட் அபாரம்**

2-வது பகுதியில் ஸ்பெயின் அணி தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. 63-வது நிமிடத்தில் இந்த அணியின் டேவிட் வில்லா அடித்த பந்தைப் போர்த்துகல் கோல் காப்பாளர் எட்வார்டோ தடுத்து, வெளியே தள்ளினார்.

அதனை அப்படியே மீண்டும் கோல் கம்பத்துக்குள் வில்லா சாமர்த்தியமாக அடிக்க, ஸ்பெயின் 1:0 என முன்னிலை பெற்றது.

**எங்கே றொனால்டோ?**

இதற்குப் பதிலடி கொடுக்க போர்த்துகல் அணியின் டேனி, டியாகோ மேற்கொண்ட முயற்சிகள் வீணாகின. போர்த்துகல் அணித் தலைவர் றொனாடோவின் ஆட்டமும் சுத்தமாக எடுபடவில்லை. இவர் பந்தைத் தட்டிச் செல்வதே அரிதாக இருந்தது.

**சிவப்பு அட்டை**

ஆட்டத்தின் 89-வது நிமிடத்தில் போர்த்துகல்லுக்கு பெரும் அதிர்ச்சி. பெனால்டி ஏரியாவில் வைத்து ஸ்பெயின் வீரர் கேப்டெவில்லா முகத்தில் முழங்கை வைத்து முரட்டுத்தனமாகத் தடுத்ததாகக் கூறி, ரிக்கார்டோ கோஸ்டாவுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டு, வெளியேற்றப்பட்டார். இதையடுத்து பத்துப் பேருடன் போர்த்துகல் விளையாட நேர்ந்தது. இறுதியில் ஸ்பெயின் அணி 1:0 என வெற்றி பெற்றி காலிறுதிக் குள் நுழைந்தது. போர்த்துகல்பரிதாபமாகவெளியேறியது. காலிறுதியில் ஸ்பெயின் அணி, பராகுவேயைச் சந்திக்கின்றது. ஆட்ட நாயகன் விருதை ஸ்பெயின் வீரர் சேவி தட்டிச் சென்றார்.




உலகக் கிண்ண கால்பந்தாட்டம்-2010
சம்பியனாகும் நாடு? ..................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 09.07.2010 இற்கு முன்னர் அனுப்புவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் 10 வெற்றியாளர்களுக்கு டயலொக் நிறுவனத்தின் அழகிய Boot Bag பரிசாக வழங்கப்படும்.

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தொலைபேசி : ..................
தே.அ.அ. இல. : ..................

விளம்பரப் பகுதி,
வலம்புரி,
இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி
Dialog

## காஸின் விலை நேற்று முதல் குறைப்பு

காஸ் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி 12.5 கிலோ கிராம் செல் காஸ் 117 ரூபாயாலும், லாப் காஸ் 85 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருக்கிறது. (ச-5)

## இந்தியக் கடற்...

சென்றார். அங்கிருந்து காங்கேசன் துறைக்குச் சென்று காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி குறித்து ஆராய்ந்ததுடன் அப்பகுதிகளை நேரில் சென்றும் பார்வையிட்டார்.

காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்குத் தேவையானவளங்கள்குறித்துஅரசஅதிகாரிகள்மற்றும்இலங்கை கடற்படைத்தளபதிகள் ஆகியோருடன் அவர் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தென்னிந்திய திரை...

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு,

நான் ஒரு நடிகன், அரசியல்வாதியல்ல. ரெடி திரைப்படத்துக்கான படப்பிடிப்பு இலங்கையில் இடம்பெறுவதற்கு எதிராக தென்னிந்திய திரைப்படத்துறையினர் எடுக்கும் போராட்ட நடவடிக்கைகள் குறித்து நான் கவலைப்படப் போவதில்லை.

இந்த விடயம் தொடர்பில் நான் இதுவரை எதுவித பிரச்சினையையும் எதிர் நோக்கவில்லை. குறித்த திரைப்படத்தை தென்னிந்தியாவில் திரையிடுவதிலும் எந்தப் பிரச்சினையும் ஏற்படமாட்டாது.

படத்தின் ஒரு சில காட்சிகள் மொரிஷியஸ் தீவுகளில் நடத்தப்பட்டாலும் அநேகமான காட்சிகள் இலங்கையிலேயே எடுக்கப்படவுள்ளன என்றார். (ச-5)

## இறுதிக்கட்ட யுத்தத்தின்...

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் வகைதொகையின்றி அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் மனிதப் பேரவலங்கள் நடந்தேறின என்றும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இலங்கையில் மோதல் பல தசாப்தங்களாக இடம்பெற்றிருக்கிறது. இம்மோதலில் ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மோதலை முழுமையாக விசாரிக்க வேண்டிய சட்டரீதியான தேவை உண்டு.

ஆனால் இறுதி கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்களை விசாரிப்பது ஐ.நா. நிபுணர் குழுவின் முதற்கட்டப் பணியாகவும், தேவையாகவும் உள்ளது. அதுவேயதார்த்தமானதும் ஆகும்.

யுத்தத்தின் இறுதி நாட்களில் சர்வதேச சமூகத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் இரு தரப்பினருமே மனித உரிமைகள் சட்டங்கள், மனிதாபிமான சட்டங்கள் ஆகியவற்றை பாரதூரமான அளவில் அப்பட்டமாக மீறி இருக்கின்றார்கள்.

இலங்கையின் இறைமையில் ஐ.நா. தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கிறேன் என அவர் மேலும் கூறினார். (ச-5)


## யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபரை வாழ்த்தி வரவேற்கின்றோம்



முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி இன்று தொடக்கம் (01.07.2010) யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கடமையைப் பொறுப்பேற்கும் மதிப்புக்குரிய எமது அரசாங்க அதிபர்

**திருமதி இமெல்டா சுகுமார்**

அவர்களை உளமார வாழ்த்தி வரவேற்பதுடன் அவரது பணி சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தினர்,
மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(C-578)


## புலிகளின் பணத்தை இல...

கள் கூட்டத்தில் கூறிய தாவது,

வன்னியில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராய இந்தியாவின் சிறப்பு நிபுணர்கள் குழுவொன்று இலங்கை வரவுள்ளது. அடுத்த இரண்டு மாதத்திற்குள் முகாம்களில் எஞ்சியுள்ள 47 ஆயிரம் மக்கள் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள் குடியமர்த்தப்படுவார்கள்.

வன்னிக்காடுகளுக்கு சென்று விறகு வெட்டக்கூட ஆண்கள் இல்லாத அவலநிலை காணப்படுகிறது. வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் எமது மக்கள் படும் துயரங்களை அரசியல் ஆக்குவதை எம்மால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் சிறுபான்மை நலன்களுக்காக அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதுவே காலத்தின் தேவை எனக் கூறி சகல தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்த ஈ.பி.டி.பியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின்நடவடிக்கைவரவேற்கத்தக்கது.

அத்துடன்சர்வதேசநாடுகளுக்குபுலம்பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் வடக்குக்கிழக்குக்கு உதவிகளைசெய்ய முன்வர வேண்டும். அரசின் மூலம் உதவிகளை வழங்க விரும்பாவிட்டாலும் நேரடியாக உதவிகளை செய்யவேண்டும். ஏனெனில்வன்னியில்மக்கள் அனைத்தையுமே இழந்தவர்களாக உள்ளனர்.

குமரன் பத்மநாதன் (கே.பி.) மூலம் வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் நிதிகளை பெற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம். குமரன் பத்மநாதன் நினைத்தால் கூட இந்த நிதியை இலங்கைக்கு கொண்டு வர முடியாது. எனவே சர்வதேச புலம் பெயர்ந்த தமிழர்கள் நேரடியாக வன்னி மக்களுக்கு உதவ முன்வரவேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறினார். (ச-5)

## தமிழ்த் தேசியக் கூட்ட...

இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல். எப். (சுரேஸ் அணி) ஆகிய நான்கு கட்சிகளின் கூட்டாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகாரபூர்வமான அந்தஸ்தைப் பெறுவதற்காகவே அது ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படுகின்றது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அபிமானிகள், முக்கிய ஆதரவாளர்கள் பொதுமக்கள் ஆகியோர் இந்தக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகபதிவுசெய்யப்படவேண்டும்எனநெடுங் காலமாகவே வலியுறுத்திவந்துள்ளனர்.

பல்வேறு கலந்துரையாடல்கள் .பிடிவாத போக்குடன் கூடிய காரசாரமான விவாதங்களுக்குப்பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கையளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என தமிழ் மக்கள் மத்தியில் பிரல்பல்யம் பெற்றிருந்த போதிலும் இதுநாள் வரையிலும் அது ஓர் அரசியல் கட்சியாகவோ, அதற்கென தனியான அரசியல் கட்சிக்குரிய சின்னமோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடந்து முடிந்த தேர்தல்கள் பலவற்றில் இலங்கை தமிழரசு கட்சியின் சின்னமாகிய வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிட்டு வெற்றிபெற்று வந்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் உபதலைவராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, இணைச் செயலாளர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், துணைச் செயலாளராக திருமதி அந்தோனி மேரியம்மா பொருளாலர்களாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய எஸ்.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒருமாதத்தில் சுமார் 65 கட்சிகள் பதிவுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஐ.நா. அதிகார...

சேரா நாடுகளினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம், இரு தரப்பினருக்கும் இடையில்நிலவும்புரிந்துணர்வின்மையை வெளிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருட மே மாதத்தில் தாம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது ஜனாதிபதியுடன்இணைந்துவெளியிட்டகூட்டறிக்கையின் அடிப்படையில் இந்த நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரத்தை மீறிச் செயற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்கள் மற்றும் அதற்கான தண்டனை வழங்குதல் தொடர்பிலான சர்வ தேச தர நிர்ணயங்களை கருத்திற் கொண்டு தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் நிபுணர்கள் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இது எந்த வகையிலும் இலங்கையின் இறைமைக்கு இடையூறாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பொதுத் தேர்தலில் அழுத்தங்களை செலுத்தும் நோக்கில் மேற்குலக நாடுகள் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வந்ததாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக இலங்கை மீது சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தின் போது எந்த சந்தர்ப்பத்திலும் மனித உரிமை மீறல்கள் இடம் பெறவில்லை எனவும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது. (ச-5)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA

## ANNUAL PRIZE GIVING 2010

**Saturday 3rd July 2010**
**at 10.00 a.m.**

**Chief Guests:**

**Dr.Natkunam Ketheesan MD,PhD**
Associate Professor,James Cook University, Queensland,Australia
&
**Dr.(Mrs)Prasani Ketheesan MD,FRACGP**
General Practitioner,UniHealth Medical Centre, Townsville,Queensland,Australia

**Chairman:**
**Ven S P Nesakumar**
Archdeacon of Jaffna & Manager of the College.

**Parents ,Old Boys & Well-wishers are cordially invited**

**Principal ,Staff & Students**

(C-575)



## VAN WEST CLINIC AND NURSING HOME

## வண்மேற்கு வைத்தியசாலை
## (கங்காதரன்)

Dr கங்காதரனின் வழிகாட்டலில் பின்வரும் சேவைகள் 01.07.2010 இல் இருந்து நடைபெறும்.

1. இரவு, பகல் வைத்திய சேவை
2. தங்கி சிகிச்சை பெறல் (வாட்வசதி)
3. பொது வைத்தியம்
4. வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனைகள்
5. சத்திரசிகிச்சைநிபுணர்களின் ஆலோசனை : சத்திரசிகிச்சை
6. மகப்பேற்று வைத்தியம் : சத்திர சிகிச்சை
7. கண் வைத்தியம் : சத்திரசிகிச்சை
8. மருந்தகம்
9. ஆய்வுகூடவசதி
10. E.C.G
11. வசதியான வாகன தரிப்பிடம்

18, ஜயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்
வண் மேற்கு வைத்தியசாலை
அப்பலோ வைத்திய நிலையம்
021 222 1697

(1792)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.